வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 28.06.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 204 | பக்கங்கள் : 16

# சர்வதேச உத்தரவாதம் அளித்தாலே இனி இலங்கைக்கு எரிபொருள்கள்!

- டோக்கன் முறையால் பயனில்லையாம்
- நாடு முற்றாக ஸ்தம்பிக்கும் நிலைமை
- மின்வெட்டு நேரமும் அதிகரிக்கப்படலாம்!

கொழும்பு, ஜூன் 28

சர்வதேச வங்கி உத்தரவாதம் அளித்தால் மட்டுமே இலங்கைக்கு இனி எரிபொருள் வழங்கப்படும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. 15

## எந்த நாட்டிலிருந்தும் இலங்கை எரிபொருளைப் பெறமுடியாது!

### சம்பிக்க எம். பி. சொல்கிறார்



கொழும்பு, ஜூன் 28

சர்வதேசத்தின் மத்தியில் இலங்கை இழந்துள்ள நன்மதிப்பை பெறாமல் எந்த நாட்டிலிருந்தும் எரிபொருளைப் பெற முடியாது என்று பாட்டாலி சம்பிக்க ரணவக்க எம். பி. தெரிவித்துள்ளார். 15

## ஜூலை 10ஆம் திகதி வரை பாடசாலைகளுக்கு விடுமுறை

கொழும்பு, ஜூன் 28

எதிர்வரும் ஜூலை 10ஆம் திகதி வரை பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு உள்ளிட்ட மேல் மாகாணப் பாடசாலைகள் மற்றும் ஏனைய மாகாணங்களின் பிரதான நகரங்களில் உள்ள பாடசாலைகளுக்கே இவ்வாறு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய மாகாணங்களில் பாடசாலைகளை நடத்துவது தொடர்பில் பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் தீர்மானிக்க முடியும் என அமைச்சரவை பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

## மின்சார கட்டணம் உயர்வு; பங்குதாரருடன் பேச முடிவு

### பொதுச் சேவைகள் ஆணைக்குழு

கொழும்பு, ஜூன் 28

உத்தேச மின்சாரக் கட்டணம் தொடர்பில் பங்குதாரர்களின் ஆலோசனைக் கூட்டத்தை கூட்டுவதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

அண்மைய எரிபொருள் விலையுயர்வுகளுக்கு இணையாக மின்சார கட்டணம் அதிகரிக்காது. எனினும், ஐந்து வாரங்களின் பின்னர் மின் கட்டண உயர்வு நடைமுறைக்கு வரும் என்று ஆணைக் 15

## அமெரிக்க குடியுரிமையை துறப்பதற்கு பஸில் முடிவு?

கொழும்பு, ஜூன் 28

பஸில் ராஜபக்ஷ தமது அமெரிக்க குடியுரிமையை துறப்பதற்கு முடிவு செய்துள்ளார். இந்தத் தகவலை அவரே கட்சியின் மூத்த தலைவர்களிடம் கூறியுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் 15

## இலங்கையிலிருந்து படகில் தமிழகம் சென்ற வயோதிப தம்பதி மயங்கிய நிலையில் மீட்பு!

சென்னை, ஜூன், 28

இலங்கையில் இருந்து படகு மூலம் தனுஷ்கோடி சென்ற வயோதிபத் தம்பதியர் கடற்கரையில் மயங்கிக் கிடந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இலங்கையில் ஏற்பட்ட கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக இதுவரையிலும் 85 இற்கும் மேற்பட்டவர்கள் அகதிகளாக தமிழகம் சென்றுள்ளனர். 15



## ஒரின திருமணம்; இலங்கை வந்த பெண் விடுதலை

அக்கரைப்பற்று, ஜூன் 28

தொலைபேசி மூலம் அறிமுகமாகி ஒரே பாலினத்தில் திருமணம் செய்வதற்காக இலங்கை 15

## காங்கேசன்-தமிழகம் இடையே விரைவில் சரக்கு படகு சேவை!

### அனுமதியளித்தது அமைச்சரவை

கொழும்பு, ஜூன். 28

தமிழ்நாட்டின் பாண்டிச்சேரி, காரைக்கால் போன்ற துறைமுகங்களுக்கும் காங்கேசன் துறை துறைமுகத்துக்கும் இடையிலான சரக்கு படகு சேவையை ஆரம்பிக்க பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஜூலை 1 ஆம் திகதி யிலிருந்து சரக்கு படகு 15

## இலங்கையின் நெருக்கடி குறித்து விவாதிக்க இது சவாலான நேரம்!

### அமெரிக்கத் தூதுவர் ஜூலி கருத்து

கொழும்பு, ஜூன். 28

இலங்கையின் பொருளாதார நெருக்கடி குறித்து விவாதிக்க இது ஒரு சவாலான நேரம், இலங்கைக்கு வளமான, பாதுகாப்பான மற்றும் ஜனநாயக எதிர்காலத்தை அடைய உதவும் வகையில் நாங்கள் தொடர்ந்து உதவி மற்றும் நீண்ட கால பங்காளித்துவத்தை வழங்குகிறோம் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி 15



## ராஜபக்ஷ குடும்பம் போன்று நான் பொய் வாக்குறுதி வழங்கவில்லை!

### கூறுகின்றார் பிரதமர் ரணில்



கொழும்பு, ஜூன். 28

“இலங்கையில் கடந்த தேர்தல் காலங்களில் ராஜபக்ஷ குடும்பத்தினர் வழங்கிய பொய் வாக்குறுதிகளால்தான் நாடு இன்று மோசமான பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. நானும் அவர்கள் போல பொய் வாக்குறுதிகளை வழங்கி “படுமுட்டாள்“ என்ற பெயரைக் கேட்க விரும்பவில்லை.”

- இவ்வாறு பிரதமர் ரணில் 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

கனடாவிலிருந்து நண்பர் ஒருவரிடமிருந்து ஒரு மின்அஞ்சல் வந்திருந்தது.

அதில் எந்த குறிப்பும் இன்றி ஒரு குட்டிக் கதை மாத்திரமே இருந்தது. அதை ஏன் அனுப்பினார் என்பதை அறிய அவருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டபோது, நான் கேட்க முன்னரே, “இதற்காகத்தானே போன் பண்ணினனீர்?“ என்று அவரே கேட்டார்.

தொடர்ந்த அவர், “முதலில் கதையைப் படியும். அதற்குப் பிறகு நான் வட்ஸ் அப்பில் ஏன் அனுப்பினேன் என்று சொல்கின்றேன்” என்றார்.

நான் படித்த கதையை நீங்களும் படித்தால்தான் அவர் அந்தக் கதையை ஏன் அனுப்பினார் என்ற காரணத்தையும் உங்களோடு பகிர்ந்துகொள்ளலாம்.

கதை இதுதான்:

ஒரு நாள் பக்கத்து வீட்டுக்காரர் இவரிடம் வந்து, “என் வீட்டில் குடும்ப விழா ஒன்று நடக்கிறது, சமையலுக்கு போதிய பெரிய பாத்திரங்கள் இல்லை. உங்களிடம் இருக்கும் பாத்திரங்கள் இரண்டை இரவலாகக் கொடுங்கள், வேலை முடிந்ததும் திரும்பித் தந்து விடுகிறேன்“ என்று கேட்டார்.

உடனே அவர், பக்கத்து வீட்டுக்காரருக்கு மிகவும் பெரிய பாத்திரங்கள் இரண்டை இரவலாகக் கொடுத்தார்.

பக்கத்து வீட்டுக்காரர் ஒரு மாதிரியான நையாண்டி மனிதர். யாரையும் கேலியும் கிண்டலும் செய்து சிரிக்கச் செயவது அவரது வழக்கம்.

இவரிடம் இரவல் வாங்கிய பாத்திரத்தை அவர் திரும்பிக் கொடுக்கும்போது ஏதாவது ஒரு விதத்தில் இவரை நையாண்டி செய்து பார்க்க வேண்டும் என்று தீர்மானித்தார்.

அவர் பாத்திரங்களை திரும்பிக் கொடுக்க வந்தபோது, இவர் கொடுத்த இரண்டு பாத்திரங்களுடன் மேலும் ஒரு செம்பையும் வைத்துக் கொடுத்தார்.

“நான் இந்தச் செம்பை உங்களுக்கு கொடுக்கவில்லையே?“ என வியப்புடன் கேட்டார் இவர்.

“உங்களுடைய பாத்திரங்கள் என் வீட்டில் இருந்தபோது அவை இந்தச் செம்பைக் குட்டி போட்டன. அதனால் குட்டியையும் உடனே கொண்டு வந்தேன்“ என்றார் பக்கத்து வீட்டுக்காரர்.

சற்று யோசித்த இவர், அவர் நம்மை நையாண்டி செய்வதற்காக இந்த நாடகமாடுகிறார் என்று புரிந்து கொண்டார். சந்தர்ப்பம் வாய்க்கும்போது அவருக்குச் சரியான புத்தி கற்பிக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார்.

“ஆமாம் நண்பரே, பாத்திரங்களை கொடுக்கும்போது அவை கர்ப்பமாக இருக்கின்றன என்ற உண்மையைச் சொல்ல மறந்து விட்டேன்“ என்று கூறியவாறு, பக்கத்து வீட்டுக்காரர் கொடுத்த பாத்திரங்களை வாங்கிக் கொண்டார்.

சில நாட்கள் கடந்தன, ஒரு நாள் பக்கத்து வீட்டுக்காரரிடம் சென்று, என் வீட்டில் ஒரு விசேஷம், பெரிய பாத்திரங்கள் போதாமல் இருக்கின்றது, தயவு செய்து பெரிய பாத்திரங்கள் இரண்டு கொடுங்கள் என்று கேட்டார். அந்த வீட்டுக்காரரும் இரண்டு பெரிய பாத்திரங்களை கொடுத்தார்.

இரண்டு நாட்கள் கழித்து இவர் ஒரு பாத்திரத்தை மட்டும் எடுத்துக்கொண்டு பக்கத்து வீட்டுக்காரரிடம் சென்றார்.

“உங்களிடம் வாங்கிய பாத்திரம் இதோ இருக்கிறது“ என்றார்.

“நான் இரண்டு பாத்திரம் கொடுத்தேனே, ஒன்றுதான் திருப்பிக் கொண்டு வந்திருக்கிறீர்கள்?“ என பக்கத்து வீட்டுக்காரர் கேட்டார்.

அதற்கு அவர், தமது முகத்தில் வருத்தம் பிரதிபலிக்க, “நண்பரே, ஒரு தீய நிகழ்ச்சியினைச் சொல்வதற்காக வருந்துகிறேன். தாங்கள் எனக்கு அளித்த பாத்திரங்களில் ஒன்றான பெண் பாத்திரம் கர்ப்பமாக இருந்திருக்கிறது. என் வீட்டுக்கு வந்த இரவே அது பிரசவ வேதனைப்பட ஆரம்பித்துவிட்டது. துரதிர்ஷ்டவசமாக அது பிரசவித்த குழந்தையும் செத்து விட்டது. தாயும் இறந்து விட்டது. அவை இரண்டையும் தகனம் செய்துவிட்டேன்“ என்றார்.

இதுதான் அந்த நண்பர் அனுப்பிய கதை. அதை ஏன் அனுப்பியிருப்பார் என்று நீங்களும் புரிந்துகொண்டிருப்பீர்கள்.

அண்மையில் இந்தப் பத்தியில், நமது தமிழ் அரசியல்வாதிகள் சிலர் தமிழ் மக்களை முட்டாள்கள் என்று நினைத்துக் கொண்டிருப்பதாக ஒரு லண்டன் நண்பர் சலித்துக் கொண்டது பற்றி எழுதியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அப்படி, தமிழ் மக்கள் முட்டாள்கள் என்று நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு (இந்த பக்கத்து வீட்டுக்காரர் போன்றவர்களுக்கு) மக்கள் முட்டாள்கள் இல்லை என்பதை நிரூபிக்க அதிக நேரம் செல்லாது என்பதை உணர்த்தவே இந்தக் கதையை அனுப்பினேன் என்று அவர் வாட்ஸ் அப்பில் தகவல் தெரிவித்திருந்தார்.

- ஊர்க்குருவி



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் ஆண்டை முன்னிட்டு சேக்கிழார் பெருமான் குருபூசை தினம் திக்கம் கலாசார மண்டபத் தில் நேற்று முன்தினம் நடைபெற் றது. இந்து கலாசார உத்தியோகத் தர் கிருஷ்ணகுமாரி சிவானந்தன் தலைமையில் நடந்த இந்த நிகழ் வில் யாழ். பல்கலைக்கழக இசைத் துறை விரிவுரையாளர் கலாநிதி சுகன்யா அரவிந்தன் பிரமவிருந் தினராகப் பங்கேற்றிருந்தார். குரு பூசையை முன்னிட்டு நடத்தப்பட்ட இந்துசமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுவதையும் மாணவர்களின் நிகழ்வையும் படங்களில் காணலாம்.

## அதிர்ச்சியடைய வைத்த வாகன தரிப்பிட கட்டணம்!

கிளிநொச்சி, ஜூன் 28

புதூர் நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழாவில் கலந்து கொள்ளச் சென்ற பக்தர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது வாகனத் தரிப்பிட கட்டணம்.




நேற்று திங்கட்கிழமை புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் திருவிழா நடந்து வருகிறது. வன்னியிலுள்ள பிரசித்தி பெற்ற நாகதம்பிரான் ஆலயங்களில் ஒன்றான இந்த ஆலய திருவிழாவில் நாடெங்குமிருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொள்வது வழக்கம். நேற்றையதிருவிழாவிற்கு சென்ற பக்தர்களை, வாகன தரிப்பிட கட்டணம் அதிர்ச்சியடைய வைத்துள்ளது. காரணம், கார், வான்களுக்கான கட்டணமாக ரூ. 500 அறவிடப்பட்டுள்ளது. (ஐ)

## எரிசக்தி அமைச்சின் செயலரின் காரை மறித்துப் போராட்டம்!

கொழும்பு, ஜூன் 28

மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் மாபா பத்திரணவின் காரை மறித்து போராட்டக்காரர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

கொள்ளுப்பிட்டியில் உள்ள அமைச்சு வளாகத்திற்கு வருகை தந்த சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய ஊழியர்கள் குழுவாலேயே அவர் தடுத்து வைக்கப்பட்டார் என்று முதல்கட்டமாக வெளியான தகவல்கள் தெரிவித்தன.

சிபெற்கோ எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தனியாரிடம் ஒப்படைக்கப்படும் என அமைச்சர் காஞ்சன விஜயசேகர நேற்று தெரிவித்தாரெனவும் உண்மையைக் கண்டறியவே தாங்கள் வந்தனர் என்றும் அவர்கள் இதன்போது கூறினர்.

எனினும், அமைச்சரவை இரகசியங்களை வெளியிட முடியாது என அமைச்சின் செயலாளர் போராட்டக்காரர்களிடம் தெரிவித்திருந்தார். (ஐ)

## நீதிமன்ற செயல்பாடுகளும் இன்று முதல் மட்டுப்பாடு!

கொழும்பு, ஜூன் 28

இன்று செவ்வாய்க்கிழமை முதல் ஜூலை வெள்ளிக்கிழமை வரையான நாட்களில் நீதிமன்றங்களில் அவசர வழக்குகள் மாத்திரமே விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

நீதிச்சேவைகள் ஆணைக் குழு நேற்று இது குறித்த அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

வழக்கமாக தவணையிடப் பட்ட வழக்குகள், புதிய திகதியில் விசாரணைக்கு எடுக்கப்படும் விவரம் காலையில் நீதிமன்றத்தில் காட்சிப்படுத் தப்படும். அவசர வழக்குகள் மட்டும் விசாரணைக்கு எடுக் கப்படும் என்றும் தெரிவிக் கப்பட்டது. (ஐ)

# ‘ஈழநாடு’வின் செய்திக்கு நல்லூர் கூ.சங்கம் விளக்கம்!

யாழ்ப்பாணம், ஜூன் 28

ஈழநாடு நேற்றைய (27.06.2022) பத்திரிகையில் “நல்லூர் கூ. சங்க எரிபொருள் நிலையம் அதிகாரிகளால் பழி வாங்கப்படுகிறதா?“ என்ற தலைப்பிடப்பட்டு வெளியான செய்தி தவறானது என்று நல்லூர் பல. நோக்கு கூட்டுறவு சங்க பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று அனுப்பிய மறுப்புக் கடிதத்தில்,

“27.06.2022ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பெற்றோல் விநியோகம் தொடர்பான செய்தி தவறானதாகும். எமது சங்கத்திற்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கும் உள்ள நல்லுறவைச் சிதைக்கும் நோக்கோடு பிரசுரிக்கப்பட்ட செய்தியாகவே இதனைக் கருதவேண்டியுள்ளது.”, என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு:**

நல்லூர் பல நோக்கு கூட்டுறவு சங்கத்துக்கும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்குமான நல்லுறவை சிதைக்க வேண்டிய அவசியம் “ஈழநாடு“வுக்கு கிடையாது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினதும், நல்லூர் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தினதும் நம்பகமான மூலங்களை அடிப்படையாகக் கொண்டு - உறுதிப்படுத்தியே அந்த செய்தியை வெளியிடப்பட்டது.

நல்லூர் கூட்டுறவு சங்கம் குறிப்பிட்ட செய்தியை தவறு என்று தெரிவித்தபோதிலும், பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரிகள் தமக்கு குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் வழங்குமாறு கோரினர் என்ற தகவலை அவர்கள் மறுக்கவில்லை.

11ஆம் திகதிக்கு பின்னர் கல்வியங்காடு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருள் வழங்கப்படவில்லை. பெற்றோல் வழங்கப்படும் என்ற நம்பிக்கையில் தினமும் அதிகாலை முதல் இரவு வரை காத்திருந்த மக்கள் ஏமாற்றத்துடனே சென்றனர். அவர்களுக்கு முறையான பதில் எதுவும் ஒரு வாரமாக வழங்கப்படவில்லை - அதன் பின்னரே பெற்றோல் இல்லை என்ற அறிவிப்பு ஒட்டப்பட்டது. அதுவரை கூட்டுறவு சங்கத்தினரும் தமக்கு எரிபொருள் வழங்கப்படும் என்ற நம்பிக்கையிலேயே செயல்பட்டிருந்தனர்.

இதேசமயம், பல நோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு சொந்தமான பல எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் பணம் செலுத்தப்பட்ட அடுத்தடுத்த நாட்களிலேயே எரிபொருள் விநியோகிக்கப்பட்டபோதும், நல்லூர் பல நோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு வழங்கப்படாமைக்கான காரணத்தையும் சங்கம் தெளிவுபடுத்தவில்லை. (ஆ-ர்)

ஈழநாடு
Eelanadu
28.06.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஆனி 15

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# மக்கள் அதிகாரத்தின் தேவை?

தமிழ்த் தேசிய அசியல்வாதிகள் ஒவ்வொருவரும், தாங்கள் நினைத்தவாறு செயல்படுகின்றனர். ஒரு கட்சிக்குள் இருப்பவர்களிடையில்கூட, கருத்தொருமிப்போ, ஒருங்கிணைவோ இல்லை. தமிழ் அரசு கட்சியின் செயல்பாடுகள், அதன் தலைவரின் கட்டுப்பாட்டுக்குள் முற்றிலுமாக இல்லை. உண்மையில் தமிழ் அரசு கட்சியிலுள்ள, ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களுமே தலைவர்கள் போல்தான் செயல்படுகின்றனர். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு கோரி, இந்திய பிரதமருக்கான கடிதத்தில் ஆறு கட்சிகள் கைத்தெழுத்திட்டிருந்தன.

ஆனால், அதே கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களே, பிரிந்து செல்வதற்கான பொதுசன வாக்கெடுப்பை கோரி பிரசாரங்களை செய்யும் புலம்பெயர் குழுக்களின் அழைப்பில், அவர்களின் கூட்டங்களில் பங்குகொண்டு பேசுகின்றனர். இவைகள் கட்சியின் தலைமைக்கு தெரிந்துதான் நடக்கின்றனவா? உண்மையில் பல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, தாங்கள் எந்த அரசியல் நிலைப்பாட்டின் அடிப்படையில் செயல்படுகின்றோம் என்பதுகூட தெரிவதில்லை. அந்தளவுக்கு அறியாமையில் இருக்கின்றனர்.

இன்னொரு புறமோ, ஒரு சிலர் தென்னிலங்கை சிங்கள கட்சிகளின் உட்கட்சி சந்திப்புக்களில்கூட பங்குகொள்கின்றனர். தமிழ் மக்களின் வாக்குகளால், தெரிவு செய்யப்பட்டவர்கள், எந்த தற்துணிவின் அடிப்படையில் இவ்வாறான செயல்பாடுகளை நியாயப்படுத்த முடியும்? பாராளுமன்ற உறுப்பினர்களை கட்டுப்படுத்துவதற்கான ஏதாவது பொறிமுறை இருக்கின்றதா? இந்தக் கேள்விகளை, தமிழ் சூழலில் யார் முன்வைப்பது?

மறுபுறம் இன்றைய நெருக்கடி நிலையில், தமிழ் மக்களின் பொருளாதாரப் பிரச்னைகள் தொடர்பில் தனியான ஆய்வுகளோ அல்லது, தனியான வேலைத் திட்டங்களோ, எந்தவொரு கட்சியிடமாவது இருக்கின்றனவா? கட்சித் தலைமைகள் என்போர் இது தொடர்பில் சிந்தித்திருக்கின்றனரா? வடக்கு - கிழக்கை பொருளாதார ரீதியில் மீட்பதற்கு, ஆகக் குறைந்தது, சில பிரச்னைகளையாவது கையாள்வதற்கான கூட்டு வேலைத்திட்டம் இருக்கின்றதா? இந்தக் கேள்விகளை முன்வைப்பது யார்? மொத்தத்தில் அரசியல்வாதிகளை தட்டிக் கேட்கும், சரியான வழியில் முன்தள்ளுவதற்கு ஒரு வலுவான மக்கள் அமைப்பு இல்லாவிட்டால், நிலைமைகளை ஒருபோதுமே சரிசெய்ய முடியாது.

ஏனெனில், தற்போது தேர்தல்களில் போட்டியிடும் கட்சிகளைப் பொறுத்தவரையில், தமிழ்த் தேசிய அரசியலென்பது, வெறுமனே தேர்தல் கால சுலோகம் மட்டும்தான். தேர்தல் முடிந்தவுடன் தமிழ்த் தேசியம் அடுத்த தேர்தலுக்குத்தான் நினைவுக்கு வரும்.

இந்த நிலைமையை ஓரளவாவது, மாற்றியமைக்க வேண்டுமாயின், தங்களை கேள்விக்கு உள்ளாக்கும் வகையில், ஒரு பிரிவினர் வெளியிலிருக்கின்றனர். என்னும் உணர்வையாவது கொடுக்கக் கூடிய நிலையில், ஒரு பலமான மக்கள் இயக்கமொன்று அவசியம். ஆகக்குறைந்தது தற்போதைய நிலையில் வடக்கு - கிழக்கு என்னும் அடிப்படையில் இவற்றை செய்ய முடியாவிட்டாலும்கூட, மாவட்ட மட்டத்திலாவது இவற்றை முன்னெடுக்க வேண்டும். பின்னர் அனைத்தையும் ஒன்றிணைத்து, ஒரு மக்கள் அதிகார மையமாக மாற்றியமைக்கலாம். ஆனால், இவ்வாறு உருவாக்கப்படும் அமைப்பு, அரசியல்வாதிகள், அரசியல் கட்சிகளுக்கு தலைவணங்குவதாக இருக்கக் கூடாது. மாறாக, அரசியல்வாதிகளை தலைகுனியச் செய்வதாக இருக்க வேண்டும்.

இன்றுள்ள தமிழ்த் தேசிய கட்சிகளை பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்கள், எவருமே மக்களுக்கு பொறுப்புச் சொல்லக் கூடிய நிலையில் இல்லை. அது தங்களின் கடமையென்பதைக்கூட, உணர முடியாதவர்களாகவே இருக்கின்றனர். இந்த நிலைமையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென்றால், அதற்குள்ள ஒரேயொரு வழி, தமிழ் தேசியம் பேசும் பாரம்பரிய அரசியல் கட்சிகளுக்கு வெளியில், மக்கள் அதிகார மையமொன்றை கட்டியெழுப்புவதன் மூலம் மட்டும்தான் இதனை செய்யமுடியும். இதன் மூலம்தான், பொறுப்பற்றிருக்கும் அரசியல்வாதிகளை, மக்களை நோக்கி இறங்கிவரச் செய்ய முடியும். தாங்கள் அடுத்த தேர்தலில் தோல்விடைந்துவிடுவோம் என்னும் அச்சம் அவர்களைப் பற்றிக்கொண்டால் மட்டும்தான், அவர்கள் மக்களை நோக்கி வருவார்கள். அவ்வாறான அச்சத்தை கொடுக்கும் வல்லமையுள்ள மக்கள் அதிகார மையமொன்றுதான், இப்போது தமிழ் மக்களுக்கு தேவையானது. தமிழ் சமூகத்தின் படித்த தரப்பினர் இது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.




# அநுரகுமார திஸநாயக்கவின் ‘முதலைக்கண்ணீர்’!

அலசுவது இராஜதந்திரி

*எதனையே புதிதாக கண்டுபிடித்தவர் போல தென்னிலங்கையில் தோன்றிய இனவாதமே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரன் ஆயுதம் ஏந்த முக்கிய காரணமாகும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.*

*தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட மகாநாட்டில் ஓரிரு தினங்களுக்கு முன்னர் பங்குபற்றிப் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.*

*தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமல்ல. வடக்கு - கிழக்கில் இயங்கிய அனைத்து ஆயுதப் போராட்ட அமைப்புகளுக்கும் ஒரு முன்மாதிரியாக ஆயுதப் போராட்டத்தில் இலங்கையில் முதலில் குதித்ததே மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி.) என்பது குறிப்பிடத்தக்கது.*

*இலங்கை ஒருபோதுமே குறிப்பாக வடக்கு - கிழக்கு யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் கூட இன்றிருப்பது போல பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்திருக்கவில்லை.*

*இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடி பற்றி ஆராய்வதற்காக அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று நேற்றைய தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரைச் சந்தித்தது. இந்த நிலையில், கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட அரசுக்கு எதிரான நிலைப்பாடு தென்னிலங்கையில் அதிகமாக புரையோடியுள்ளது.*


*இதேவேளை, கடந்த சனிக்கிழமை தமது தேசிய மக்கள் கட்சியின் பிராந்திய மகாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்திய அந்தக் கட்சியின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் தென்னிலங்கையில் தோன்றிய இனவாதம் காரணமாகவே ஆயுதம் ஏந்தினார் என்று குறிப்பிட்டிருந்தார்.*

*வே.பிரபாகரன்கூட முப்பது வருடங்களுக்குமுன்னர் யாழ்ப்பாணத்தில் வைத்து ரைம் சஞ்சிகைக்கு பேட்டியொன்றை வழங்கியிருந்தார். அப்போது அவர் தாம் சிறுவனாக இருந்தபோது தென்னிலங்கையில் 1958ஆம் ஆண்டு வெடித்த தமிழருக்கு எதிரான இனக் கலகம் பற்றிய பலதரப்பட்ட தகவல்களை அறிந்திருந்ததாகவும். அந்தத் தகவல்களில் கொழும்பின் புறநகரப் பகுதியொன்றில் இந்து கோயில் குருக்கள் ஒருவர் வன்முறையாளர்களால் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்ட சம்பவம் தன்னை வெகுவாக அதிர்ச்சியடைய வைத்திருந்தது எனத் தெரிவித்திருந்தார்.*

*1958ஆம் ஆண்டு மட்டுமல்ல. அதன் பின்னர் 1977ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலகம் இவை தவிர தமிழர்கள்மீது இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் இடம்பெற்ற அடக்குமுறைகளே பிரபாகரனை மட்டுமல்ல. ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களையும் பாதித்திருந்தன.*

*இந்த நிலையில் வடக்கு - கிழக்கு தமிழர்களின் ஆயுதப்போராட்டத்துக்கான காரணத்தை அதுபற்றி நன்கறிந்து வைத்திருக்கும் வட பகுதி மக்கள் மத்தியில் பேசாது தென்னிலங்கையிலுள்ள சிங்கள மக்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுரகுமார திஸநாயக்க எடுத்துக்கூறி வடக்கு - கிழக்கு பிரச்னைக்கான ஓர் அரசியல் தீர்வுக்கு அந்த மக்களை தயார்படுத்துவதே சரியான அணுகுமுறையாக இருக்க முடியும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
எதிர்பார்த்தவற்றில் நன்மை உண்டாகும். புதிய நட்புகளால் ஆதாயம் அடைவீர்கள். தடைபட்டிருந்த செயல்கள் நிறைவேறும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**இடபம்**
மனதில் பல்வேறு சிந்தனைகள் உருவாகும். சிந்தித்து செயல்பட வேண்டும். செயல்களில் கவனம் தேவை. மற்றவரை அனுசரித்துச் செல்வதால் நன்மையுண்டு.

**மிதுனம்**
அலைச்சல் கூடும். எதிர்பார்த்தவற்றில் ஏமாற்றத்தை சந்திக்க வேண்டியதாக இருக்கும். ஆடம்பர செலவுகள் செய்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வராமல் போகும்.

**கடகம்**
உங்களின் செல்வாக்கு உயரும். முயற்சியில் இருந்த தடைகள் விலகும். முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். வரவு முன்பைவிட அதிகரிக்கும். பணியிடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும்.

**சிம்மம்**
புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். தொழிலில் இருந்த தடைகள் விலகும். பணியிடத்தில் உங்களின் ஆலோசனைக்கு மதிப்புண்டாகும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

**கன்னி**
பழைய அனுபவங்களைக் கொண்டு முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். எதிர்பார்த்த இடத்தில் இருந்து உதவிகள் வந்து சேரும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும்.

**துலாம்**
பிறருடன் அனுசரித்து செல்வதால் சில நன்மைகளை அடையலாம். பணியிடத்தில் சில பிரச்னைகளை சந்திக்க நேரும். விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**விருட்சிகம்**
நண்பர்களின் உதவியுடன் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். யோகமான நாள். புதிய முயற்சிகள் வெற்றியாகும். வாழ்க்கைத்துணையுடன் இருந்த முரண்பாடு நீங்கும்.ஷ வியாபாரத்தில் இருந்த தடை விலகும்.

**தனுசு**
அரசு வழியில் நீங்கள் எதிர்பார்த்தவை நிறைவேறும். மற்றவர்களால் முடியாத ஒரு செயலை சாதாரணமாக செய்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி வெற்றியாகும்.

**மகரம்**
உங்களின் திறமை வெளிப்படும் நாள். குடும்பத்தினரின் தேவையை நிறைவேற்றுவீர்கள். சகபணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். உங்களின் நிதி நிலை உயரும். தொழிலை விரிவு செய்வீர்கள்.

**கும்பம்**
திட்டமிட்ட செயலில் கவனம் செலுத்துவீர்கள். மகிழ்ச்சியான நாள். மறைமுக எதிர்ப்புகளைக் கண்டறிந்து, எச்சரிக்கையுடன் செயல்பட்டு எண்ணியதை முடிப்பீர்கள்.

**மீனம்**
தைரியத்துடன் செயல்பட்டு நினைத்ததை முடிப்பீர்கள். அரசு வழியில் ஆதாயம் காண்பீர். பொறுப்புகள் கூடும். உங்களின் திறன் வெளிப்படும். அதிகாரிகளின் ஆதரவு உண்டாகும். வியாபாரத்தில் லாபம் கூடும்.

# ஒன்றேகால் கிலோ தங்கம் கடத்தல் 3 இலங்கை பெண்கள் கைதாகினர்!

சென்னை, ஜுன் 28

சென்னை விமான நிலையத்தில் 59 இலட்சத்து 26 ஆயிரம் இந்திய ரூபாய் மதிப்புள்ள ஒரு கிலோ 275 கிராம் தங்கத்தை பறிமுதல் சுங்கப் பிரிவினர் கைது செய்துள்ளனர். இந்தக் கடத்தல் சம்பவத்துடன், இலங்கையை சேர்ந்த 3 பெண்களை கைது செய்தனர்.

சென்னை - கொழும்பு விமானம் சென்னை மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையத்துக்கு வெளிநாடுகளில் இருந்து வரும் விமானங்களில் பெருமளவில் தங்கம் கடத்தி வரப்படுவதாக விமான நிலைய சுங்க பிரிவு அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து சுங்கப் பிரிவு அதிகாரிகள் கொழும்பில் இருந்து வந்த விமானத்தில் பயணம் செய்தவர்களை தீவிரமாக கண்காணித்தனர். அப்போது இலங்கையை சேர்ந்த பாத்திமா ரபியா (வயது 25), பாத்திமா நவியா (24), பாத்திமா ஆப்ரா (26) ஆகிய 3 பேரை சந்தேகத்தின் பேரில் நிறுத்தி விசாரித்தனர்.

அதிகாரிகளிடம் 3 பேரும் முன்னுக்குபின் முரணாக பேசியதால் அவர்களின் உடைமைகளை சோதனை செய்தனர். ஆனால், அதில் எதுவும் இல்லாததால் 3 பேரையும் தனிய றைக்கு அழைத்துச் சென்று சோதனை செய்தனர். அப்போது 3 பேரின் உடைகளுக்குள்ளும் மறைத்து வைத்து தங்கத்தை கடத்தி வந்ததை கண்டு பிடித்தனர்.

3 பேரிடம் இருந்தும் 59 இலட்சத்து 26 ஆயிரம் இந்திய ரூபாய் மதிப்புள்ள ஒரு கிலோ 275 கிராம் தங்கத்தை பறிமுதல் செய்ததுடன், அவர்களை கைது செய்தனர். (ஐ)

# மீண்டும் அதிகரித்தது கொரோனா; முகக்கவசம் அணிவது கட்டாயம்!

சென்னை, ஜுன் 28

தமிழ்நாட்டில் மீண்டும் கொரோனா தொற்று அதிகரித்துள்ளது. இதையடுத்து முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதார விதிகளை பின் பற்றுமாறு மாநில அரசு அறிவித்துள்ளது. அத்துடன், முகக்கவசம் அணியாதவர்களுக்கு மீண்டும் அபராதம் விதிக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளது.

இதேசமயம், நேற்று மட்டும் தமிழகத்தில் 1472 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில், " தற்பொழுது கோவிட் தொற்று பல்வேறு மாநிலங்களில் அதிகரித்து வருகின்றது. மேலும் தமிழகத்தை பொறுத்தவரை சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், கோயம்புத்தூர் மற்றும் கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் குறிப்பாக நகர்ப்புறங்களில் அதிகரித்து வருகின்றது. இத்தொற்றானது பொதுமக்கள் பொது இடங்களில் சமூக இடைவெளியை பின்பற்றாமல் இருத்தல், பொது இடங்களில் முகக்கவசம் அணியாமல் இருத்தல் போன்ற கோவிட் தடுப்பு வழிமுறைகளை கடைபிடிக்காமல் கவனக்குறைவாக இருப்பதால் கோவிட் தொற்று அதிகரித்து வருகின்றது.

இதை தவிர்க்க பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களை தவிர்த்தல், சமூக இடைவெளி கடைப்பிடித்தல், முகக்கவசம் சரியாக வாய் மற்றும் மூக்கை மூடியவாறு அணிதல் போன்ற நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடித்தல் மற்றும் உரிய நேரத்தில் கோவிட் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் - என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# அ. தி. மு. கவின் ஆட்சியை நிச்சயம் நான் அமைப்பேன்!

## சசிகலா சொல்கிறார்

சென்னை, ஜுன் 28

"என்னைப் பொறுத்தவரை, கட்சித் தொண்டர்களும், வாக்களிக்கும் பொதுமக்களும்தான் தலைவரை தீர்மானிப்பார்கள். அவர்கள் என்னுடன் இருக்கிறார்கள். அதனால், நிச்சயமாக இதை சரிசெய்து, மீண்டும் அ. தி. மு. க. ஆட்சியைக் கொண்டு வருவேன். அது ஏழைகளின் ஆட்சியாக, மக்களின் ஆட்சியாக இருக்கும்" என்று வி. கே. சசிகலா கூறியுள்ளார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் தோழியான வி. கே.சசிகலா நேற்று, சென்னை தியாகராய நகரில் உள்ள அவரது இல்லத்திலிருந்து, அ. தி. மு. க. தொண்டர்களை சந்திக்கும் சுற்றுப்பயணத்தைத் தொடங்கினார்.

திருவள்ளூர் மாவட்டம் குண்டலூர் பகுதியில் அவர் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர்: "அ. தி. மு. கவை நிறுவுநர் தலைவர் எம். ஜி. ஆர். ஆரம்பிக்கும்போதே இது ஏழை எளியவருக்கான இயக்கம். சாதி, மத பேதமில்லாத இயக்கம். இந்த இயக்கத்தை எம். ஜி. ஆர்., ஏழைகளின் ஆட்சியாகவே கொடுத்து, அவர்களுக்கு வேண்டியதை எல்லாம் செய்தார்.

அதனைத் தொடர்ந்து மறைந்த முதல்வர் ஜெயலலிதாவும், ஏழைகளுக்காகவே வாழ்ந்தார். அவர்களுக்கான நல்ல திட்டங்களை வகுத்துக் கொடுத்தார். அவரின் மறைவுக்குப் பின்னர், இந்த இயக்கத்தை கட்டிக் காக்க வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது. அதனால், என்னுடைய சுற்றுப் பயணத்தை ஆரம்பித்திருக்கிறேன். அடுத்த ஆட்சி அ. தி. மு. க. ஆட்சிதான். அதுதான் உண்மையாகவே மக்களுக்கான ஆட்சி. நிச்சயமாக அ. தி. மு. க. ஆட்சியை அமைப்பேன். அது மக்களின் ஆட்சியாக இருக்கும்" என்று அவர் கூறினார். (ஐ)

# அ. தி. மு. க. கட்சி நாளிதழில் பன்னீர்செல்வம் பெயர் நீக்கம்!

சென்னை, ஜுன் 28

அ. தி. மு. க. கவில் ஒற்றைத் தலைமை கோஷம் அதிகரித்துள்ளது. இந்த நிலையில், எடப்பாடி பழனிசாமி கட்சி தலைமையை தன் வசமாக்கும் பணிகளை முடுக்கிவிட்டுள்ளார். இவருக்கு போட்டியாக ஓ. பன்னீர்செல்வமும் செயல்படுகிறார்.

இந்நிலையில், இருவரும் தனித்தனியாக ஆலோசனைகளை நடத்தி வருகின்றனர்.



இந்நிலையில், கட்சியின் அதிகாரபூர்வ நாளிதழான 'நமது அம்மா' நிறுவுநர் பொறுப்பில் இருந்து பன்னீர் செல்வம் நீக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே, எடப்பாடி பழனிசாமி, ஓ. பன்னீர்செல்வம் ஆகியோரை சமரசம் செய்வதற்கான பேச்சுக்களையும் கட்சியின் நடுநிலையாளர்கள் ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# வீடுகளில் எரிபொருட்களை சேமித்து வைப்பது ஆபத்து!

## பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 28

வீடுகளில் எந்த வகை எரி பொருட்களையும் சேமித்து வைப்பதால் பெரும் ஆபத்து நேரலாம். அநியாமாக உயிரி ழப்புகள் ஏற்படலாம் என பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

எரிபொருட்களை வீடுகளில் சேமித்து வைக்க வேண்டாம் என பொலிஸ் ஊடகப் பேச்சா ளர் நிஹால் தல்துவ அறிவுறுத் தியுள்ளார்.

ஹோமாகமவில் கடந்த சனிக்கிழமை இரவு வீடொன்று தீக்கிரையானதில் வீட்டுக்குள் இருந்த கணவன், மனைவி தீயில் கருகி உயிரிழந்தனர். அவர்களின் இரண்டு குழந்தை கள் படுகாயமடைந்து மருத்து வமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வீட்டுக்குள் வைக்கப்பட்டி ருந்த எரிபொருள் கொள்கல னில் இருந்து தீ பரவியதே இந்த அனர்த்தத்துக்கு காரணம் என பொலிஸ் ஊடகப் பேச்சா ளர் நிஹால் தல்துவ தெரிவித் துள்ளார். (அ)

# ஜனநாயக முறையில் அரசை விரட்டுவோம்!

## சஜித் அறைகூவல்

கொழும்பு, ஜூன் 28

"தற்போதைய அரசு ஜன நாயக வழியில் விரட்டியடிக் கப்படும். அதற்கான அரசியல் தலைமைத்துவம் எம்மால் வழங்கப்படும்." - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சிறைதண்டனை அனுபவித் துவரும் போராட்டக்காரர் களை -சிறைச்சாலைக்கு நேற்று முன்தினம் நேரில் சென்று சந்தித்து, சுகநலம் விசாரித்த எதிர்க்கட்சித் தலைவர், அதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

போராட்டத்தின் நோக்கங் கள் இன்னும் உயிர்ப்புடன் இருக்கின்றன. ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி என்பன அந்த நோக் கங்களுடன் மாற்றமின்றி பய ணிக்கின்றன.

காட்டுமிராண்டித்தனமான



ராஜபக்ஷ வாதம் மற்றும் அரச பயங்கரவாதம் என்ற இரண் டையும் நிராகரிக்கின்றோம்.

வன்முறையைத் தூண்டிய ராஜபக்ஷக்கள் வெளியே. ஆனால், நாட்டுக்காகப் போரா டியவர்கள் உள்ளே. இந்த அணுகு முறையை அனுமதிக்க முடியாது.

இந்தக் கையாலாக அரசு ஜனநாயக வழியில் விரட்டிய டிக்கப்படும். அதற்கான அரசியல் தலைமைத்துவம் எம்மால் வழங்கப்படும். அர சைத் தெரிவு செய்வதற்கான உரிமை மக்களுக்கு வழங்கப் பட வேண்டும்" - என்றார். (அ)



# வடக்கு இ.போ.ச ஊழியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு

## பெற்றோல் வழங்குமாறு வலியுறுத்தி

யாழ்ப்பாணம், ஜூன் 28

**பணிக்குச் சென்று திரும்புவதற்கு பெற்றோல் வழங்கக் கோரி இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்கள் நேற்று பணிப்புறக் கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் தெரிவிக்கையில்-

நாங்கள் தொடர்ந்தும் எமது போராட்டங்களை முன்னெடுத்துள்ளோம். தூர தேசங்களிலிருந்து வருபவர்கள் குறித்த நேரத்துக்குள் அலுவ லத்துக்கு செல்ல முடியாமை யால் எங்கள் வரவுகூட விடுப் பாகவே கருதப்படுகிறது.

தனியார் பஸ் உரிமையா ளர்கள் பணிப்புறக்கணிப்பு மேற் கொண்டால் உடனடியாகவே அதிகாரிகள் தலையிட்டு அவர்க ளுக்கு தீர்வு வழங்குகிறார்கள்.

ஆனால், கொரோனாக் காலத்திலும் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய இலங்கை போக் குவரத்துச் சபை ஊழியர்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கரிசனை கொள்வ தில்லை. எனவே சம்பந்தப் பட்ட அதிகாரிகள் எமக்கு பெற்றோல் கிடைக்க ஏற்பாடு




செய்யவேண்டும்-என்றனர்.

இதேவேளை, பருத்தித் துறை இ.போ.ச டிப்போ ஊழி யர்களும் நேற்று பணிப்புறக் கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பஸ் சேவைகள் முற்றாக முடங்கின. (அ-02-03)

# விவசாயிகளுக்கான மண்ணெண்ணெயை மக்களுக்கு வழங்க முற்பட்டதால் குழப்பம்!

யாழ்ப்பாணம், ஜூன் 28

அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண் ணெண்ணெய் விநியோகத் திற்கு என இராணுவத்தினர் பதிவுகளை மேற்கொண்டமை யால் சிறிது நேரம் குழப்பம் ஏற்பட்டது.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுக் காலை முதல் இராணுவத்தினர் மண் ணெண்ணெய் விநியோகத் துக்கு என பதிவுகளை முன் னெடுத்தனர்.

அதனை கேள்வியுற்று பலர் பதிவுகளை மேற்கொள்ள முண் டியடித்தனர். அதன்போது எரிபொருள் நிரப்பு நிலையத் தினர், விவசாயிகளுக்கு விநி யோகிக்கவே மண்ணெண் ணெய் உள்ளது எனவும், ஏனையோருக்கு வழங்க முடியாது எனவும் கூறினர்.

அதனையும் பொருட்படுத்தாது இராணுவத்தினர் பதிவுகளை முன்னெடுத்தனர்.

அதனை அடுத்து குறித்த விடயம் தொடர்பில், கோப் பாய் பிரதேச செயலருக்கும் புத்தூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளருக் கும் அறிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து மண்ணெண் ணெய் விவசாயிகளுக்கு மாத்தி ரமே பகிர்ந்தளிக்க உள்ளோம். ஏனையோருக்கு விநியோகிக்க முடியாது என இரா ணுவத்தின ருக்கு தெரிவித்ததை அடுத்து, அவர்கள் பதிவு நடவடிக்கை களை இடைநிறுத்தினர். (அ)

# 2022 இல் சட்டவிரோதமான முறையில் ஆஸி. செல்ல முயன்ற 453 பேர் கைது!

கொழும்பு, ஜூன். 28

2022ஆம் ஆண்டின் இது வரையான காலப் பகுதியில் இலங்கையிலிருந்து சட்ட விரோதமான முறையில் ஆஸ்தி ரேலியாவுக்குச் செல்ல முயன்ற 453 பேர் பொலிஸார் மற்றும் கடற்படையினரால் கைதுசெய் யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேற முயல் வோரிடம் இருந்து 2 இலட்சம் ரூபா முதல் 10 இலட்சம் ரூபா வரையான பணத்தை ஆட்கடத் தல்காரர்கள் பெற்றுக்கெள்கின் றனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு சுட் டிக்காட்டியுள்ளது.

ஆட்கடத்தல்காரர்கள் பழுதடைந்த படகுகளையும் உடைந்த படகுகளையும் சட்டவிரோத நடவடிக்கை களில் பயன்படுத்துகின்றனர் என்றும், இதன் மூலம் உயிரா பத்துக்கள் அதிகம் ஏற்படும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ கூறினார்.

கடத்தல்காரர்களுக்கு 1 முதல் 5 வருடங்கள் வரை சிறைத் தண்டனை விதிக்கப் படும் என் றும் பொலிஸ் ஊடகப் பேச்சா ளர் எச்சரித்துள்ளார். (அ)

# அத்தியாவசிய மருந்து பெறும் இடம் தகவல் வழங்கும் முறைமை அறிமுகம்

கொழும்பு, ஜூன் 28

மருந்து தட்டுப்பாட்டுக்கு மத்தியில் பெற்றுக்கொள்ள முடியாத மருந்துகள் உள்ள இடம் மற்றும் அவற்றை விநி யோகித்துக் கொள்ளக்கூடிய இடம் தொடர்பில் தகவல் வழங்கும் முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அகில இலங்கை மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தினால் இந்த வேலைத்திட்டம் அறி முகப்படுத்தப்பட்டுள்ளது.

தட்டுப்பாடு நிலவும் மருந்துகள் தொடர்பில் 045 22 75 636 என்ற இலக்கத்திற்கோ அல்லது 077 19 77 177 என்ற வட்ஸ்அப் இலக்கத்துக்கோ தொடர்பை ஏற்படுத்தி அறி விக்க முடியும் என அகில இலங்கை மருந்தக உரிமை யாளர் சங்கத் தலைவர் சந்திக கன்கந்த தெரிவித்துள்ளார். (அ)



# பஸ் கட்டணம் குறித்து இன்று இறுதி தீர்மானம்

கொழும்பு, ஜூன் 28

பஸ் கட்டணம் அதிகரிப்பு தொடர்பில் இன்று இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

போக்குவரத்து அமைச்சருக்கும், பஸ் உரிமையாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு இன்று இடம்பெறவுள்ளது.

இதன்போதே இது தொடர்பில் ஆராயப்பட்டு, இறுதி முடிவு எடுக்கப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ)

# சைக்கிளுக்கும் தலைக்கவசம்!

கொழும்பு, ஜூன் 28

சைக்கிள் ஓடும்போது எப்பொழுதும் தலைக்கவசம் அணியுமாறு சைக்கிள் ஓட்டுபவர்களை பொலிஸார் கேட்டுள்ளனர்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்புக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திக்க ஹப்புகொட, வீதிகளில் குறிப்பாக இரவு வேளைகளில் சைக்கிள் ஓட்டுபவர்கள் தொடர்பில் வாகனச் சாரதிகள் அவதானத்துடன் செயற்பட வேண்டுமென தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சைக்கிள் ஓட்டுபவர்கள் சைக்கிளின் முன்பக்கத்திலும் பின்பக்கத்திலும் சரியான விளக்குகளை பொருத்தியிருக்க வேண்டும் மற்றும் பிரகாசமான நிற ஆடைகளை அணிந்திருக்க வேண்டும்.

சைக்கிள் ஓட்டுபவர்கள் சாலை விதிகளை கடைப்பிடிக்க வேண்டும், மோட்டார் போக்குவரத்து சட்டத்தின்படி, அவர்கள் சாலையின் இடது புறமும் செல்லவேண்டும்.

வலப்புறம் அல்லது இடது பக்கம் திரும்பும்போது பல வீதி விபத்துக்கள் பதிவாகி வருகின்றன. எனவே சைக்கிள் ஓட்டுபவர்களும் வீதி அடையாளங்கள் மற்றும் போக்குவரத்து சமிக்ஞைகளை கடைப்பிடிப்பது முக்கியம்.

வீதிகளில் சைக்கிள்கள் அதிகரித்துள்ளதையடுத்து, ஏனைய வாகன ஓட்டிகளும் கவனக்குறைவாக வாகனங்களை செலுத்த வேண்டாம்- என்றார்.

நாடு எரிபொருள் நெருக்கடியை எதிர்நோக்கி வரும் நிலையில் தற்போது சைக்கிள்கள் பயணிக்கும் வாகனமாக மாறியுள்ளதாக இலங்கை சைக்கிள் ஓட்டுதல் சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி அமல் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த கலாநிதி அமல் ஹர்ஷ டி சில்வா, சொந்த சொகுசு வாகனங்கள் வைத்திருப்பவர்கள் கூட தமது கார்கள் மற்றும் வாகனங்களை விட்டு விட்டு சைக்கிள்களில் வேலை மற்றும் வியாபார நிலையங்களுக்கு செல்கின்றனர்.

எனவே சைக்கிள் ஓட்டுபவர்கள் சாலையை பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என்று வாகன ஓட்டிகளுக்கு தெளிவான செய்தியை அனுப்ப விரும்புகிறோம்.

சைக்கிள் ஓட்டுதல் என்பது உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் நன்மை பயக்கும் ஒரு செலவு குறைந்த போக்குவரத்து முறையாகும்.

ஒரு எரிபொருள் ஏற்றுமதியை குறைக்க கிட்டத்தட்ட 50 முதல் 52 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகிறது. அந்த தொகையுடன் அனைத்து இலங்கையர்களுக்கும் சைக்கிள் வழங்க முடியும்-என்றார். (அ)

# வடக்கை இந்திய அரசுக்கு விற்பனை செய்யவுள்ளனர்!

## மன்னார் மீனவர் சங்கத் தலைவர் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், ஜூன் 28**

**தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் வட பகுதியை இந்திய அரசு அபிவிருத்தி செய்வதாகக்கூறி வடபகுதியை இந்திய அரசுக்கு விற்கப்போகிறார்கள் என மன்னார் மாவட்ட மீனவர் சங்கத் தலைவர் மொகமட் ஆலம் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று நாட்டில் காணப்படுகின்ற அரசியல் நிலை, இதற்கு அப்பால் எரிபொருள் தட்டுப்பாடு, மீனவர்களுக்கு எரிபொருள் கிடைக்காமை தொடர்பான பிரச்னை,

மன்னார் மாவட்டத்தில் அமைக்கப்பட்ட-அமைக்கப் படவுள்ள காற்றாலை மின் சாரம் மற்றும் அதானி குரூப் எடுத்துள்ள காற்றாலை மின் சாரத் திட்டம், கனியவள மண் அகழ்வு, மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள், சம காலத்தில் சட்டவிரோதமாக செய்யப்படுகின்ற மீன்பிடி முறைகள், வடக்கில் உள்ள மீனவ அமைப்புகளை புதுப்பித்தல் போன்ற பல விடயங்களை நாங்கள் பேசியிருக்கிறோம்.

கடந்த வியாழக்கிழமை இந்திய குழு ஒன்று மன்னார் மாவட்டத்தில் அதானி குரூப் முன்னெடுக்கவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து சென்றிருக்கின்றது.

தற்போது இலங்கைக்கு இந்தியாவின் எரிபொருள் விநியோகம் வழங்கப்படாது. ஆனால் இந்தியா தற்போதைய நிலையில் எமக்கு உரிய உதவிகளை வழங்கத் தயாரில்லை. ஆனால் வடபகுதியில் வளங்களை பாவிப்போம் என்பது அவர்களின் குறிக்கோளாகக் காணப்படுகிறது.

தற்போது இலங்கையில் உள்ள வளங்களை சரியாக பயன்படுத்த இலங்கை அரசுக்கு தெரியவில்லை.

இந்த அரசாங்கம் நாட்டைக் கூறு போட்டு ஒவ்வொரு பகுதியாக விற்றிருக்கின்றது. அதானி என்பவர் இந்தியாவில் பணம் படைத்த ஒரு பெரிய தொழிலதிபர். அவருக்கு வட பகுதியை விற்க போகின்றார்கள். நிச்சயமாக தற்போதுள்ள சூழ்நிலையில் வடபகுதியை அபிவிருத்தி செய்வதாக கூறித் திட்டங்களை நடைமுறைப் படுத்தி இந்தியாவுக்கு வடபகுதியை விற்கப்போகின்றார்கள்- என்றார். (அ)

# ரம்புக்கனை துப்பாக்கி சூட்டுச் சம்பவம் பொலிஸாருக்கு பிணை வழங்க எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 28

ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கேகாலை முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.பி.கீர்த்தி ரத்ன மற்றும் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களை பிணையில் விடுவிப்பதை தாம் எதிர்ப்பதாக சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றில் அறிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் தன்னை கைது செய்து விளக்கமறியலில் வைக்க எடுத்த தீர்மானத்தை ரத்து செய்யுமாறு கோரி முன்னாள் கேகாலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கீர்த்தி ரத்ன மற்றும் ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் நால்வரினால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனக பண்டார இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

மனுவை எதிர்வரும் 29ஆம் திகதி பரிசீலனைக்கு அழைக்குமாறு உத்தரவிட்ட மேன்முறையீட்டு நீதிமன்றம், அன்றைய தினம் இந்த மனுவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதாக அறிவித்தது. (அ)

# வடமராட்சி வடக்கு கிராம சேவகர்கள் நேற்று சுகயீன விடுப்புப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 28

பெற்றோல் வழங்குவதில் புறக்கணிக்கப்படுவதாக தெரிவித்து வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 35 கிராம சேவர்களும் நேற்று சுகயீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பகுதிகளிலும் கிராம சேவையாளர்களுக்கு அத்தியாவசிய சேவை அடிப்படையில் எரிபொருள் வழங்கப்படும் நிலையிலும் வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராம சேவகர்களுக்கு மட்டும் எரிபொருள் இதுவரை வழங்கப்பட வில்லை.

இதனையடுத்து அவர்கள் நேற்று சுகயீன விடுப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் கிராம சேவையாளர்களுக்கு அத்தியாவசிய தேவைக்காக எரிபொருள் வழங்கவேண்டும் என்ற சுற்றறிக்கை அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்த நிலையிலும் இதுவரை வடமராட்சி வடக்கு கிராம சேவகர்களுக்கு எரிபொருள் வழங்கப்படவில்லை.

இதேவேளை, பொதுமக்களுடன் நீண்ட வரிசையில் காத்திருந்து எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கு கூட பிரதேச செயலர்கள் அனுமதி வழங்கவில்லை என்றும்

தமது பிரச்னைகளை முன்னிறுத்தி வடமராட்சி வடக்கு பிரதேச செயலருக்கு கிராம சேவகர்கள் அனைவரும் ஒப்பமிட்டு கடிதம் அனுப்பியுள்ளனர். (அ-02)

# பராமரிப்புகள் இன்றி பாழடைந்துள்ள யாழ். மத்திய கல்லூரி நீச்சல் தடாகம்!

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நீச்சல் தடாகம் பராமரிப்புகள் இன்றி பாசிகள் படர்ந்து, பாழடையும் நிலையில் காணப்படுகிறது.

இளைஞர்களுக்கான நாளைய அமைப்பினால் சுமார் 2 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்ட நீச்சல் தடாகத்தை அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த 2012ஆம் ஆண்டு பெப்ரவரி 6 ஆம் திகதி திறந்து வைத்தார்.

அதனை தொடர்ந்து சில மாத காலம் மாணவர்களுக்கான இலவச நீச்சல் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. பின்னரான காலப் பகுதியில் நீச்சல் தடாகம் பராமரிப்புக்கள் இன்றி கைவிடப்பட்டுள்ளது. ஆடைகள் மாற்றும் அறைகள் உடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இந்நிலையில் கடந்த 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் அமைச்சரவை கூட்டத்தில் நீச்சல் தடாக புனரமைப்பு மற்றும் தொடர் பராமரிப்பு தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டதை அடுத்து, நீச்சல் தடாகத்தை புனரமைத்து சிறப்பான முறையில் பயன்படுத்துவதற்கான பொறி முறையை உருவாக்குவது என தீர்மானிக்கப்பட்டது.

அதற்கு ஜனாதிபதி மற்றும் அப்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் இணக்கம் தெரிவித்திருந்தனர்.

கடந்த வருடம் ஜூன் மாதம் யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த அப்போதைய விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ யாழ். மத்திய கல்லூரியின் நீச்சல் தடாகத்தையும் பார்வையிட்டு சென்றிருந்தார்.

இந்நிலையில் அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்பட்டு, ஜனாதிபதி, பிரதமரின் இணக்கம் தெரிவிக்கப்பட்டு ஒரு வருட காலம் கடந்த நிலையிலும் இன்னமும் நீச்சல் தடாக புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்க விடவில்லை.

பெரும் செலவில் அமைக்கப்பட்ட நீச்சல் தடாகத்தை பராமரிக்க ஒரு பொறிமுறை உருவாக்கப்படாமையே அது இந்நிலையில் இருக்கக் காரணம் என பலரும் விசனம் தெரிவித்துள்ளனர் . (அ)

# நாணய நிதியத்தின் பதிலுக்காக காத்திருக்கிறார் பிரதமர் ரணில்!

### 6 பில்லியன் டொலர் உதவி கோரியுள்ளார்



கொழும்பு, ஜூன் 28

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்காக 6 பில்லியன் டொலர்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

அத்துடன் ரூபாயை நிலைப்படுத்த மேலும் ஒரு பில்லியன் டொலரையும் அவர் கோரியுள்ள நிலையில் இதற்கு சாதகமான பதில் கிடைக்க வாய்ப்புள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நிலவும் நெருக்கடிக்கு மத்தியில் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லவேண்டும் என விரும்புவோர் பிரதமருக்கு ஆதரவாக இருந்தால், சாதகமான முடிவு கிடைக்கும் என்றும் அவர் கூறியுள்ளார் .

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி மற்றும் அனைத்து தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பான ஒருமித்த கருத்தே அதற்கான ஒரே வழி என்றும் வஜிர அபேவர்தன தெரிவித்தார். (அ)

# எரிபொருள் நெருக்கடி நிலை ரயில் சேவைகளை பாதிக்கும்

கொழும்பு, ஜூன். 28

தற்போதைய எரிபொருள் நெருக்கடி தொடருமானால் புகையிரத சேவைகள் பாதிக்கப்படும் என ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் தற்போதைய நெருக்கடி காரணமாக புகையிரத திணைக்களத்தின் திறன் நீடிக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவரான சுமேத சோமரதன தெரிவித்தார்.

நிதி, போக்குவரத்து மற்றும் எரிபொருள் பிரச்னைகளால் தற்போது அதிகளவான மக்கள் ரயில்களை பயன்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

அண்மைக் காலமாக ரயில்களில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு குறைவான ரயில் கட்டணங்களும் பங்களித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், கோரிக்கையை நிறைவேற்ற ரயில் திணைக்களம் பல பிரச்னைகளை எதிர்நோக்கி வருகிறது. (அ)

# பிரதேச செயலாளருக்காக வீதிக்கு இறங்கிய ஊழியர்!

கொழும்பு, ஜூன். 28

மருத்துவ சிகிச்சைக்காக மாத்தறை பொது வைத்தியசாலைக்குச் சென்ற மாத்தறை பிரதேச செயலாளர் கௌசல்ய குமாரிக்கு சிகிச்சை வழங்காமல் தடுத்து வைத்திருந்த சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மாத்தறை பிரதேச செயலக ஊழியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் வைத்தியாலைக்கு சிகிச்சைக்காகச் சென்ற மக்கள் கடும் சிரமத்துக்கு உள்ளாகினர்.

மாத்தறை மாவட்ட செயலகத்துக்கு முன்பாக பேரணியாக சென்ற ஊழியர்கள், இந்த பிரச்சனைக்கு நியாயமான தீர்வை வழங்குமாறு மாத்தறை அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதன்படி மாத்தறை பிரதான அரசாங்க அதிபர் வை. விக்ரமசிறியை சந்திப்பதற்கு பிரதிநிதிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. (அ)

# எரிபொருள் விநியோகம் குறித்து உறுதியாக எதுவும் தெரியவில்லை!

### காத்திருப்பதில் அர்த்தமில்லை

கொழும்பு, ஜூன். 28

எரிபொருள் விநியோகம் வழமை போன்று இடம் பெறுமா என்பது உறுதியாகத் தெரியவில்லை என பெற்றோலிய தனியார் தாங்கி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் எரிபொருள் விநியோகம் செய்யப்படவில்லை என அந்த சங்கத்தின் இணைச் செயலாளர் சாந்த சில்வா தெரிவித்துள்ளார்.

வரையறுக்கப்பட்ட முன்பதிவே இதற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் கையிருப்பு காரணமாக எரிபொருள் தாங்கி ஊழியர்கள் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அத்தியாவசிய சேவைகளுக்கான எரிபொருளை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன என சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலைமையினால் நேற்று குறைந்த எண்ணிக்கையிலான எரிபொருள் தாங்கிகளே எரிபொருள் விநியோக முன்பதிவுகளை பெற்றுக்கொள்ள முன்வந்ததாக தெரிவிக்கப்பட்டது.

எனவே எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் மக்கள் வரிசையில் நிற்பதில் அர்த்தமில்லை என தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# கொள்கலன் போக்குவரத்து கட்டணம் 10 வீதம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன். 28

கொள்கலன் போக்குவரத்திற்கான கட்டணத்தை அதிகரிக்க இலங்கை கொள்கலன் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய நேற்று முதல் அமுலாகும் வகையில் கொள்கலன் போக்குவரத்து கட்டணம் 10 வீதத்தினால் அதிகரிக்கப்படுவதாக அந்தச் சங்கம் அறிவித்துள்ளது.

எரிபொருள் விலை உயர்வை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# மரக்கறி விநியோகம் முற்றாக ஸ்தம்பிக்கும்

கொழும்பு, ஜூன். 28

மரக்கறிஉற்பத்திகளை சந்தைக்கு கொண்டு செல்லுதல் மற்றும் நாடு முழுவதும் விநியோகிப்பது முற்றாக ஸ்தம்பிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் மெனிங் சந்தை வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மீண்டும் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டமையே இதற்கு காரணம் எனவும் சங்கத்தினர் கூறியுள்ளனர்.

கமத்தொழில் வளர்ச்சி குறித்து அரசாங்கம் எவ்வித அக்கறையும் காட்டாது எடுக்கும் முடிவுகள் காரணமாக மரக்கறிகளை பயிரிடும் உழவர்கள் முற்றிலும் பயிர்ச் செய்கையில் இருந்து விலகிச் செல்வதை நிறுத்த முடியாது போகும் எனச் சங்கத்தின் தலைவர் அருண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் இருக்கும் பொருளாதார மத்திய நிலையங்களுக்கு மரக்கறிகளை மொத்தமாக கொள்வனவு செய்ய வரும் வியாபாரிகளின் எண்ணிக்கை 95 வீதமாக வீழ்ச்சியடைந்து காணப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

விநியோகமும் 90 வீதம் குறைந்து போனதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# பிரசன்னவின் வீட்டுக்கு தீ; தம்மதின்ன தேரர் கைது!



கொழும்பு, ஜூன். 28

அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் வீட்டுக்கு தீவைத்து தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் களனிப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் வண. நெதலகமுவே தம்மதின்ன தேரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் நேற்றுக் காலை கம்பஹா பொலிஸ் நிலையத்தில் சரணடைந்ததையடுத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

தேரரிடம் வாக்குமூலம் பெற்றதன் பின்னர் அவரை கம்பஹா நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மண்ணெண்ணெயின் விலையும் அதிகரிக்கும்



கொழும்பு, ஜூன். 28

மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பு தொடர்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர இது குறித்து அறிவித்துள்ளார்.

இதன்படி, எதிர்காலத்தில் மண்ணெண்ணெய் விலையை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

ஏலவே, எரிவாயு விலை அதிகரிப்பு மற்றும் எரிவாயு பற்றாக்குறை காரணமாக பொதுமக்கள் கடும் அவதியுற்றுள்ள நிலையில், பொது மக்கள் சமையலுக்காக மண்ணெண்ணெயை பயன்படுத்தி வந்தனர்.

இப்போதைய நெருக்கடி நிலையின் காரணமாக அதிக விலை கொடுத்தும், பல மணிநேரங்கள், பல நாட்கள் என வரிசைகளில் காத்திருந்தும் மண்ணெண்ணெயைப் பெற்றுக் கொள்ளவேண்டிய இக்கட்டான நிலைக்கு முகம்கொடுத்துள்ளனர்.

பலர் ஒரு நாளில் ஒரு நேர உணவை மாத்திரம் பெற்றுக் கொள்வதுடன், நாளின் பெரும் பகுதியை எரிபொருள் வரிசையில் செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் மீண்டும் மண்ணெண்ணெயின் விலையை அதிகரித்தல் என்பது பொதுமக்களின் வாழ்க்கைச் சுமையை மேலும் அதிகரிப்பதாகவே கருதப்படுகின்றது.(அ)

# நாட்டில் நெருக்கடி நிலையால் மூடப்படும் வைத்தியசாலைகள்

கொழும்பு, ஜூன். 28

சுகாதாரத்துறையில் நிலவும் கடுமையான மருந்து தட்டுப்பாடு காரணமாக நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் கிராமிய மருத்துவமனைகள் மூடப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக அநுராதபுரத்தின் கலாவெவ கிராமிய மருத்துவமனை, கல்நேவ மருத்துவமனை, நேகம மருத்துவமனை என்பன மூடப்பட்டுள்ளன.

இலங்கையின் மிகவும் கஷ்டப் பிரதேசமான மொனராகலையின் சியம்பலாண்டுவை மருத்துவமனையும் தற்போது மருந்து பற்றாக்குறை காரணமாக மூடப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் இன்னும் பல்வேறு மருத்துவமனைகள் மருந்து தட்டுப்பாடு காரணமாக மூடப்படும் அபாயம் எதிர்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# மகாராஷ்டிரா நெருக்கடி: பாஜகவின் ‘இந்துத்துவா’ உத்தவ் தாக்கரேவின் இந்துத்துவத்தை ஓரங்கட்டி விட்டதா?

**வினீத் கரே**

இந்தியாவின் மகாராஷ்டிராவில் சிவசேனை அரசின் எதிர்காலம் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. இதற்கிடையே, இந்த அரசியல் நெருக்கடி தேசிய எதிர்கட்சிகளுக்கு என்ன விளைவை ஏற்படுத்தும் என்ற கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

பொதுத் தேர்தலுக்கு இன்னும் இரண்டு ஆண்டுகள் உள்ளன. மகாராஷ்டிராவில் தேசியவாத காங்கிரஸ், காங்கிரஸ் மற்றும் சிவசேனையின் மஹாவிகாஸ் அகாடிக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியால் ஏற்கனவே பலவீனமாக உள்ள தேசிய எதிர்க்கட்சிகள் மேலும் பலவீனமடையும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

“எதிர்க்கட்சிகள் ஏற்கனவே பலவீனமாக உள்ளன. 2024ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அவர்கள் வெற்றி பெற எந்த வாய்ப்பும் இல்லை. அடுத்த மாதம் மக்களை வைத் தேர்தலை நடத்தினால், பாஜக அதிக பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வரும். காங்கிரஸ் மேலும் கீழே சென்று விடும்,” என்று சிஎஸ்டிஎஸ் பேராசிரியர் சஞ்சய் குமார் கூறுகிறார்.

இருப்பினும், பிரசாந்த் கிஷோர் போன்ற ஆய்வாளர்கள் அரசியலில் இரண்டு ஆண்டுகள் என்பது நீண்ட காலம் என்று கூறுகிறார்கள்.

என்னை பொருத்தவரை, பாஜகவிற்கு 350 இடங்கள் கிடைக்கும்.காங்கிரஸ/க்கு 20 அல்லது 30 இடங்கள் வரையில் கிடைக்கலாம் என்று இதுகுறித்து சஞ்சய் குமார் குறிப்பிட்டார்

சிவசேனை தலைவர் உத்தவ் தாக்கரே மற்றும் சிவசேனாவில் உள்ள அவரது ஆதரவாளர்கள் பாஜகவின் இந்துத்துவத்திற்கு எதிராக மகாராஷ்டிராவில் ஒரு மாற்று இந்துத்துவாவை வழங்க முயன்றனர் என்று புணேயில் உள்ள ஹிந்து பிசினஸ் லைனின் மூத்த பத்திரிகையாளர் ராதேஷ்யாம் ஜாதவ் தெரிவித்தார்.

இந்த மாற்று இந்துத்துவா மாதிரியை நாட்டின் பிற பகுதிகளுக்கும் கொண்டு செல்ல முடியும் என்ற நம்பிக்கையை தேசியவாத காங்கிரஸ் மற்றும் காங்கிரஸுக்கு இது அளித்தது. ஆனால் சிவசேனை அரசின் நெருக்கடி இந்த முயற்சிகளுக்கு பின்னடைவை ஏற்படுத்தும்.

தனது இந்துத்துவ கொள்கை அனைவரையும் உடன்



அழைத்துச் செல்லப் போகிறது என்று உத்தவ் தாக்கரே சட்டப்பேரவையில் கூறினார் என்று ராதேஷ்யாம் ஜாதவ் குறிப்பிட்டார்.

மகாராஷ்டிராவில் இந்துத்துவா அரசியலின் வரலாறு பற்றிக்கூறிய அவர், “பால் தாக்கரே இந்துத்துவா அரசியலைத் தொடங்கினார். மகாராஷ்டிராவில் முன்னேற வேண்டுமென்றால், தான் மட்டுமே இந்துத்துவாவின் குரலாக இருக்க வேண்டும் என்று பாஜக கருதியது. சிவசேனை, தம்பியின் பாத்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அது நினைத்தது,” என்று சொன்னார்.

“உத்தவ் தாக்கரே 2019-ல் பாஜக கூட்டணியில் இருந்து விலக முடிவு செய்தார். பாஜகவின் இந்துத்துவாவை சமாளிக்க வித்தியாசமான இந்துத்துவ அணுகுமுறை தேவை என்று காங்கிரஸ், டிஎம்சி மற்றும் என்சிபி போன்ற கட்சிகள் நம்பின. அந்த முயற்சிகளுக்கு இந்த அரசியல் நெருக்கடியால் பின்னடைவு ஏற்படும்.”

“இனி தேசிய அரசியலில் இந்துத்துவா பற்றிப்பேசும் ஒரே கட்சியாக பாஜக மட்டுமே இருக்கும். சிவசேனையை சேர்ந்தவர்களே அக்கட்சிக்கு சவால் விட்டதாக பாஜக தனது ஆதரவாளர்களுக்கு நம்பிக்கை அளித்துள்ளது. இந்துத்துவா பிரச்னையால் ஒரு மாநிலத்தில் ஆட்சி கவிழ்வது இதுவே முதல் முறை என்று பாஜகவினர் கூறுகிறார்கள்,”என்று அவர் சுட்டிகாட்டினார்.

### இந்துத்துவாவும் அமலாக்கத்துறையும்

ஏக்நாத் ஷிண்டேவின் கிளர்ச்சிக்கும் இந்துத்துவாவைக் காப்பாற்றுவதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் ராதேஷ்யாம் ஜாதவ் கூறுகிறார். ஆனால் குவஹாத்தியில் கூடியிருக்கும் பல சிவசேனை எம்.எல். ஏக்கள் தங்கள் வணிகம், நிறுவனங்கள் போன்றவற்றிற்காக அமலாக்க இயக்குநரகத்தின் இலக்காக இருப்பதே இதற்குக் காரணம்.

பாஜக மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதற்காகவும், அது இந்துத்துவாவின் ஒரே குரலாக மாற வேண்



டும் என்பதற்காகவும் இப்படியெல்லாம் நடக்கிறது என்கிறார் அவர்.

ஏக்நாத் ஷிண்டேயின் கிளர்ச்சியில் பாஜகவின் பங்கு பற்றிய தெளிவான அறிகுறிகள் உள்ளன.

உத்தவ் தாக்கரேவின் அரசு கவிழ்ந்தால், கருத்துப் போரின் பலன் பாஜகவுக்கு கிடைக்கும் என்று காங்கிரஸ் கட்சியின் முன்னாள் செய்தித் தொடர்பாளர் சஞ்சய் ஜா தெரிவிக்கிறார்.

“பாஜக தொடர்ந்து வெற்றி பெறுகிறது, ஆட்சி அமைக்கிறது என்றும் மறுபுறம் எதிர்கட்சிகள் வீழ்ச்சியடைந்து வருகின்றன என்றும் மக்கள் கருதுவார்கள்.”

“எதிர்க்கட்சிகளுக்கு போட்டியிடும் திறமை இல்லை என்று தோன்றும். நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று மக்கள் எங்களைத்தான் விரும்புகிறார்கள் என்று பா.ஜ.க கூறிக்கொள்ளும்,” என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மறுபுறம், சிவசேனை எம்.எல்.ஏ.க்கள் பிரிந்துபோவதால், கட்சி பலவீனமடைந்து வருவதாக கருதக்கூடாது என்று காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் பி.எல்.புனியா கூறுகிறார்.

எம்.எல்.ஏ. ஆன பின் ஒருவர் கட்சி மாறினால், வாக்காளர்களையும் அவர் உடன் அழைத்துச்செல்வதாக அர்த்தம் இல்லை,” என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் 17 மாநிலங்களில் பாஜக ஆட்சி செய்கிறது. அதாவது நாட்டின் பரப்பளவில் 44 சதவிகிதம் மற்றும் மக்கள் தொகையில் சுமார் 50 சதவிகிதம் பாஜக ஆட்சியின் கீழ் உள்ளது.

எதிர்கட்சியான காங்கிரஸின் அடித்தளம் சுருங்கி வருகிறது. கூடவே ஒருவர் பின் ஒருவராக தலைவர்கள் கட்சியை விட்டு வெளியேறி வருகின்றனர்.

பிரதமர் நரேந்திர மோதி நாட்டின் மிகவும் பிரபலமான தலைவர். பலவீனமான மற்றும் சிதறியுள்ள எதிர்க்கட்சிகள், அவரது வலுவான நிலைக்கான பல காரணங்களில் ஒரு முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது.

பாஜகவை எதிர்த்துப் போராட ஒன்றிணைவதாக எதிர்க்கட்சிகள் எந்த அறிகுறியையும் கொடுக்கவில்லை. மாறாக ஒவ்வொரு எதிர்க்கட்சித் தலைவரும் மற்றவர் மீது ஆதிக்கம் செலுத்த விரும்புகிறார்கள் என்ற செய்திகளே வருகின்றன என்று சிஎஸ்டிஎஸ் அமைப்பின் சஞ்சய் குமார் கூறுகிறார்.

இத்தகைய சூழ்நிலையில், காங்கிரசும் ஆட்சியின் ஒருபகுதியாக இருக்கும் மகாராஷ்டிராவில் ஏற்பட்டு வரும் நிகழ்வுகள் எதிர்க்கட்சிகளுக்கு நல்ல செய்தி அல்ல.

“எதிர்க்கட்சியின் மையமாக காங்கிரஸ் உள்ளது. அதன் பலவீனம் மற்ற கட்சிகளையும் பாதித்துள்ளது. அவர்கள் தோல்வியடைந்தவர்களாக பார்க்கப்படுகிறார்கள். காங்கிரஸால் முடியவில்லையென்றால், இவையெல்லாம் உள்ளூர் கட்சிகள், தேசிய அளவில் அணுகல் இல்லை என்ற கருத்து ஏற்பட்டுவிட்டது,” என்று சஞ்சய் ஜா கூறுகிறார்.

புல்டோசர் விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணையவில்லை. அமலாக்க இயக்குனரகம் பல மணி நேரம் ராகுல் காந்தியை விசாரணை செய்தபோது, மத்திய அமைப்புகளை அரசு தவறாகப் பயன்படுத்தியது பற்றி காங்கிரஸ் அல்லாத கட்சிகள் எதுவும் பேசவில்லை என்று அவர் கூறுகிறார்.

குடியரசுத்தலைவர் தேர்தலுக்கான கூட்டு வேட்பாளராக யஷ்வந்த் சின்ஹாவின் பெயர் அறிவிக்கப்பட்டதில், எதிர்க்கட்சிகளின் வியூகத்தின் ஒரு மாதிரி காணப்பட்டது.

எதிர்க்கட்சிகளின் ஒற்றுமைக்கான உதாரணமாக குடியரசுத் தலைவர் வேட்பாளரை முன்வைக்க வேண்டுமானால், அதற்கான முயற்சிகள் ஓராண்டு அல்லது ஆறு மாதங்களுக்கு முன்பே தொடங்கியிருக்க வேண்டும் என்று திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் பவன் வர்மா கூறுகிறார்.

“இதற்கு தேசிய ஒருங்கிணைப்பு இருந்திருக்க வேண்டும். தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன் எதிர்க்கட்சிகளின் கூட்டத்தை கூட்டி” தரவுகளில் ஒற்றுமையை கண்டறிதல்” மூலமாக அல்லாமல், நவீன் பட்நாயக், ஜெகன் ரெட்டி போன்ற தலைவர்களிடம் பேசி, கவனமாக பரிசீலித்து வேட்பாளரை தேர்வு செய்திருக்க வேண்டும்.”என்று அவர் குறிப்பிட்டார்.

“கட்சிகள் தங்கள் மாநிலங்களுக்குச் சென்று ஒரு வருக்கொருவர் அரசியல் சண்டை போடுகின்றன. மேடையில் கைகோர்த்து முன் வைக்கும், ”தரவுகளில் ஒற்றுமை” நாட்டிற்கு தேவையில்லை. நாட்டிற்கு உண்மையான அர்த்தத்தில் ஒற்றுமை தேவை.”என்று பவன் வர்மா கூறினார்.

“யஷ்வந்த் சின்ஹாவின் பெயர் அறிவிக்கப்பட்ட பிறகு அவர் இந்தப்போரில் தனித்து விடப்பட்டுள்ளார். மேலும் எதிர்க்கட்சித் தலைவர் ஒரு முக்கிய போட்டியில் பங்கேற்க தன்னைத்தானே அர்பணித்துக்கொள்ளும் எந்த அறிகுறியும் காணப்படவில்லை,”என்று பவன் வர்மா சுட்டிக்காட்டினார்.

“யஷ்வந்த் சின்ஹாவுக்கு அனுபவம் உள்ளது. அவர் ஒரு திறமையான அரசியல்வாதி. ஆனால் எனது பார்வையில் திரௌபதி முர்முவை பல கட்சிகள் ஏன் ஆதரிக்க வேண்டும் என்பதற்கு பல தர்க்கரீதியான காரணங்கள் உள்ளன. அவர் ஒரு பழங்குடியினர், ஒரு பெண் மற்றும் தனது சொந்த வாழ்க்கையை தானே உழைத்து உருவாக்கிக்கொண்டவர்,” என்றார் அவர்.

அதாவது, பாஜக அத்தகைய ஒரு வேட்பாளரை குடியரசுத்தலைவர் பதவிக்கு நிறுத்தியுள்ளது. அவரை எதிர்த்துப் போவது பல எதிர்க்கட்சிகளுக்கு எளிதானது அல்ல.



இந்த ஆண்டு மும்பையின் பிஎம்சி (பம்பாய் மாநகராட்சி) உட்பட பிற நகரங்களிலும் உள்ளாட்சித் தேர்தல் நடைபெற உள்ளது.

பல ஆண்டுகளாக, பிஎம்சியில் சிவசேனைக்கு வலுவான பிடி உள்ளது. பிஎம்சியின் பட்ஜெட் சிவசேனையின் அரசியல் உயிர்நாடி என்று நம்பப்படுகிறது.

அதாவது முக்கியமான உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறுவது ஒருபுறம் , தனது அரசியல் எதிர்காலத்திற்காகப் போராடுவது மறுபுறம் என்று சிவசேனைக்கு இரு பக்கங்களிலும் சவால் உள்ளது.

என்சிபி தலைவர் ஷரத் பவாரால் கூட சிவசேனைவுக்கு உதவ முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதாகவும், எனவேதான் அவர் இதை சிவசேனாவின் உள்விவகாரம் என்று கூறியதாகவும் தகவல் அறிந்த ஒரு வட்டாரம் தெரிவித்தது.

தாங்கள் சரியாக ஒருங்கிணையவில்லை என்றால் சிரமங்களால் சூழப்படுவோம் என்பதை எதிர்கட்சிகள்




புரிந்து கொள்ள வேண்டும் என்கிறார் டிஎம்சியின் பவன் வர்மா.

“எதிர்க்கட்சிகள் ஒரு செயல்திட்டத்தின் கீழ் அடிமட்ட நிலையில் ஒன்று திரண்டு, ஒரு பொதுவான குறைந்தபட்ச திட்டத்தை உருவாக்கி தேசிய அளவில் தங்கள் ஒற்றுமையை வெளிப்படுத்தாவிட்டால், பொது மக்களின் அதிருப்தியை அவர்களால் திசைதிருப்ப முடியாது,”என்று பவன் வர்மா குறிப்பிட்டார்.

“கட்சிகள் ஒன்று கூடுகின்றன. பின்னர் அவர்கள் ஒருவரையொருவர் எதிர்த்து தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடுகிறார்கள். அதற்கு உங்களுக்கு டஜன் கணக்கான எடுத்துக்காட்டுகள் உள்ளன. இந்த சூழ்நிலையில் பாஜகவுக்கு அது சாதகமாக உள்ளது.”

இதை எதிர்க்கட்சிகள் புரிந்து கொள்ளாவிட்டால், அடுத்த 2024 பொதுத் தேர்தல் பாஜகவுக்கு சாதகமாக அமையும் என்று அவர் கூறுகிறார்.

சிவசேனையின் முன் இருக்கும் இந்த சவாலில் உத்தவ் தாக்கரே வெற்றி பெற்றால், எதிர்காலத்தில் கட்சி மீண்டும் ஒரு வலுவான நிலைக்கு வரக்கூடும் என்று சாகால் செய்தித்தாளின் மிருணாளினி நானிவடேகர் தெரிவிக்கிறார்.

ஆனால் தற்போது சிவசேனை தனது எதிர்காலத்திற்காக போராடுகிறது. நாட்டின் எதிர்க்கட்சிகளின் பார்வை அதன் மீது உள்ளது.

●



# இயக்கங்களின் அன்றைய இயலுமையும் இன்றைய இயலாமையும் ?

யதீந்திரா

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் (ஈ.பி.ஆர்.எல்.எப்) அவர்களது, தலைவர் பத்மநாபா கொலைசெய்யப்பட்ட தினத்தை, தியாகிகள் தினமாக நினைவு கூர்ந்துவருகின்றனர். அண்மையில் 31வது தியாகிகள் தினம் நினைவு கூரப்பட்டது. நிகழ்வில் பேசுமாறு, பம்பநாபா அபிவிருத்தி ஒன்றியம் என்னும் பெயரில் இயங்கிவரும் ஒரு பிரிவினர், என்னை அழைத்திருந்தனர். இதன் போது நான் பகிர்ந்துகொண்ட சில விடயங்களையே - இங்கு கட்டுரையாக்கியிருக்ஷகின்றேன்.

இதிலுள்ள கவலைக்குரிய விடயம் என்னவென்றால், தங்களின் தலைவருக்கான நினைவு தினத்தைக் கூட, ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பினரால், கருத்தொருமித்து, ஒருங்கிணைந்து முன்னெடுக்க முடியவில்லை. ஈழ அரசியலில், ஒற்றுமையின்மை என்னும் நோய், எவ்வாறு தமிழனத்தை பாதித்தது, பாதித்துக் கொண்டிருக்கின்றது என்பதற்கு, ஈ.பி.ஆர்.எல்.எப் ஒரு வாழும் சாட்சியாகும். ஒரு இயக்கத்தை பிரதிநிதித்துவம் செய்தவர்களாலேயே, தங்களுக்குள் ஒன்றுபட முடியவில்லையாயின், மற்றவர்கள் அனைவரையும் எவ்வாறு ஒரணியாக கொண்டுவர முடியும்? ஒற்றுமையின்மை என்னும் நோயிலிருந்து அவர்களை எவ்வாறு விடுவிக்க முடியும்? இந்தக் கேள்வியுடன்தான், தமிழ் தேசிய அரசியல் கொஞ்சம் கொஞ்சமாக சீரழிந்து செல்கின்றது. வரலாற்றோடு எவ்வித தொடர்புமில்லாத வியாபாரிகளின் ஆதிக்கத்திற்குள் சென்று கொண்டிருக்கின்றது. விரைவில் அது வியாபாரிகள் உகச்சரிக்கும் தமிழ் தேசியமாக உருமாறலாம்.

இனவிடுதலையை வென்றெடுப்பதற்கு ஆயுதப் போராட்டங்களே, ஒரேயொரு வழிமுறையாகும் என்னும் புறச்சூழலில்தான், தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கங்கள் தோற்றம் பெற்றன. உலகின் பல பாகங்களிலும் ஆயுதப் போராட்டங்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்த காலமது. நான் இந்த காலகட்டத்தை சேர்ந்தவன் இல்லையென்றாலும், வரலாற்றை உற்று நோக்கும் மாணவன் என்னும் வகையில் விடயங்களை தேடியும், சம்பந்தப்பட்டவர்களோடு உரையாடியும் அறிந்துகொண்டதன் மூலம், இந்த வரலாற்று காலகட்டத்திற்குள் செல்ல முடிந்தது. இன்று முன்னாள் இயக்கங்கள் என்னும் அடைமொழியுடன், எதைச் சாதிப்பதற்காக சென்றோம் - இப்போது எந்த நிலையில் இருக்கின்றோம் - இனி எங்களால் என்ன செய்ய முடியும்? என்னும் கேள்விகளுடன், வெறும் நினைவுகளை அசைபோட்டுக் கொண்டிருக்கும் ஒவ்வொருவரும், அன்றைய சூழலில், மாபெரும் கனவுகளுடன்தான் இயங்கங்களில் இணைந்து கொண்டவர்கள்.

உண்மையில், அன்றைய சூழலில் இயக்கங்களில் இணைந்து கொண்டவர்கள் பலர், எந்த இயக்கமென்று ஆராய்ந்து இணைந்தவர்களல்லர். அப்படி ஆராய்வதற்கான தேவையும் அப்போது இருந்திருக்கவில்லை. ஏனெனில், இயக்கங்களில் சிறந்தது எது என்னும் கேள்விகளில்லாத காலமது. அனைவருமே விடுதலைக்காக போராடுபவர்கள் என்னும் பெருமை மட்டுமே மேலோங்கியிருந்த காலமது. இயக்கங்களின் தலைமைகளுக்கிடையில் மோதல்களும், பேதங்களும் ஏற்பட்டபோது, அனைத்துமே நிர்மூலமாகியது. சமூதாயத்தை தலைகீழாக புரட்டிப் போடும் கனவுகளோடு சென்றவர்கள், துரோகி, ஒட்டுக்குழுக்கள், மண்டையன் குழுக்கள், காட்டிக்கொடுப்பவர்கள், கூலிப்படைகள் இப்படியான அடைமொழிகளிலிருந்து தப்பிப்பிதற்காக, சமூதாயத்தையேவிட்டே ஓடவேண்டிய துர்பாக்கிய நிலையுருவாகியது. இறுதியில் விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளுக்கும் இதே நிலைதான் ஏற்பட்டிருக்கின்றது.

2015இல், ஒரு சில முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள், தேர்தலில் போட்டியிடுவதற்கு சந்தர்ப்பம் தருமாறு சம்பந்தனிடம் கோரினர். அப்போது சம்பந்தன் அவர்களுக்கு வழங்கிய பதில் - உங்களிலிருந்துதான், கே.பி வந்தார். உங்களிலிருந்துதான் கருணா வந்தார். நீங்கள் அரச புலனாய்வு பிரிவோடு சேர்ந்து செயற்படுதாக சந்தேகங்கள் இருக்கின்றன - உங்களுக்கு எவ்வாறு, இடம்தரமுடியுமென்று கேட்டிருந்தார். இதிலுள்ள துர்பாக்கியம் என்னவென்றால், சம்பந்தன் அவ்வாறு கூறுகின்ற போது, முன்னாள் இயக்கங்களான கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள், சம்பந்தனை மறுதலிக்கவோ கண்டிக்கவோ இல்லை. ஒரு கட்சியில் ஆசனங்கள் வழங்குவது - வழங்காமல் விடுவது அந்த கட்சியின் முடிவு. விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு கட்டாயம் ஆசனங்கள் வழங்கத் தான் வேண்டுமென்பதல்ல.

ஆனால் அவர்களை நிராகரிப்பதற்கு சொல்லப்படும் காரணத்தில்தான், இந்த சமூதாயத்தின் மோசமான சிந்தனைப் போக்கு வெளிப்படுகின்றது. முன்னர் ஏனைய இயக்கங்களை அரச ஒட்டுக் குழுக்களென்று கூறி, அவமானப்படுத்திய போது, அமைதியாக இருந்த தமிழ் சமூகம், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் அவமானப்படுத்தப்பட்ட போதும், அமைதியாகவே இருந்தது. மொத்தத்தில் இயங்கங்களின் இன்றைய நிலை பூச்சியமாகும். ஏனைய இயக்கங்களுக்கு எது நடந்ததோ, அதுவே இப்போது, விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களுக்கும் நடந்திருக்கின்றது. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, பல பிரிவுகளாக இருப்பது போன்றுதான், விடுதலைப் புலியாதரவு புலம்பெயர் தரப்புக்களும் இருக்கின்றன.

இன்று இயக்கங்களின் நிலைமையை ஒரு வரியில் கூறுவதனால், கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைமை எனலாம். எந்த மிதவாத அரசியல் கட்சிகளை புறம்தள்ளி இயக்கங்கள் தோற்றம்பெற்றனவோ - இன்று அதே மிதவாதிகளின் தயவில் - அவர்கள் போடும் ஆசனங்களை எண்ணிக்கொண்டிருக்கும் இழிநிலையில்தான் இயக்கங்களின் கதையிருக்கின்றது. தமிழரசு கட்சியின் தயவில் அல்லது விக்கினேஸ்வரன் போன்றவர்களின் தயவில், தங்களின் எதிர்காலத்தை தேடும் நிலையில்தான் இன்று முன்னாள் இயக்கங்களின் நிலையிருக்கின்றது. இந்த நிலைமைக்கு யார் காரணம்? ஒரு காலத்தின் அரசியலை தீர்மானித்தவர்களால், ஏன் இன்றைய ஜனநாயக அரசியலில் சொல்வாக்கு செலுத்தமுடிய



வில்லை? மிதவாதிகளிடமிருந்த அரசியல் பார்வைகளைவிடவும் செழுமையான அரசியல் பார்வைகள் இயக்கங்களின் தலைமைகளிடம் இருந்தது. அன்றைய சூழலில் மிகவும் ஆழுமைமிக்க தலைவராக கருதப்பட்ட அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் கூட, 1988இல், இடம்பெற்ற, மாகாண சபை தேர்தலில் போட்டியிட முன்வரவில்லை. இத்தனைக்கும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அமிர்தலிங்கம் ஆதரித்திருந்தார். அந்த ஒப்பந்தத்திற்கு பின்னர்தான், தமிழ் மக்கள் நிம்மதியாக நித்திரைகொள்ள முடிந்ததென்று, உரையாற்றிய, அமிர்தலிங்கம், மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டு, ஒரு வலுவான தலைமைத்துவத்தை வழங்க முன்வரவில்லை.

விடுதலைப் புலிகளின் எதிர்ப்பை கருத்தில் கொண்டே அமிர்தலிங்கம், அவ்வாறனதொரு முடிவை எடுத்ததாக சிலர் கூறுகின்றனர். ஆனாலும் ஒரு ஆளுமைமிக்க தலைவர் தனக்கு சரியென்று படும் ஒன்றில் பின்நிற்கக் கூடாது. இந்தப் பின்புலத்தில்தான், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டது. இன்று பின்நோக்கி பார்த்தால், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முடிவை வரலாறு, நியாயப்படுத்தியிருக்கின்றது. இந்தியாவை புறம்தள்ளி, ஈழத்தமிழர்கள் எந்தவொரு அரசியல் தீர்வையும், எக்காலத்திலும் பெற முடியாதென்னும் வரலாற்று உண்மை நிருபிக்கப்பட்டிருக்கின்றது. பத்மநாபா கூறிய ஒரு கருத்தை சில வருடங்களுக்கு முன்னர் எனது கட்டுரையொன்றில், பயன்படுத்தியிருக்கின்றேன். அதாவது, இந்தியா என்பது ஒரு கருங்கல் பாறை. அதனோடு முட்டினால் நமது தலைதான் உடையும். ஈழத் தமிழர் அரசியலை பொறுத்தவரையில் அன்றும் இந்தியா கருங்கற்பாறைதான், இன்றும் கருங்கற்பாறை - என்றுமே பாறைதான். பாறை என்பது பலத்தின் அடைமொழி. அன்று எவருமே முன்வராத நிலையில்தான், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டது. இன்று அந்த மாகாணசபையை பாதுகாப்பது தொடர்பில்தான் உரையாடல்கள் இடம்பெறுகின்றன. இந்த இடத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அன்றைய முடிவு, வரலாற்றால் நியாயப்படுத்தப்பட்டுவிட்டது. இந்தியாவை எதிர்த்து போராட்டத்தை தொடர முடியாதென்னும் நிலையில்தான், விடுதலைப் புலிகள் தவிர்ந்த அனைத்து இயக்கங்களும் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு, ஜனநாயக நீரோட்டத்திற்கு திரும்பின. இன்று மீளவும் தமிழ் தேசிய அரசியல் இந்தியாவின் தயவிற்காகவே காத்திருக்கின்றது. ஆகக் குறைந்தது 13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தினாலே இப்போதைக்கு போதுமானதென்னும் நிலைமை உருவாக்கியிருக்கின்றது. ஆனால் இப்போது கூட, முன்னாள் இயக்கங்கள் அனைத்தும் ஓரணியில் பயணிக்க முடியவில்லை. ஒன்றாக இணைந்து மக்களை எதிர்கொள்ள முடியவில்லை. இதற்கு யார் காரணமென்றால் அனைத்து இயங்களின் மீதும்தான் விரல் நீள வேண்டும். இத்தனை அனுபவங்களுக்கு பின்னரும் தங்களுக்குள் உடன்பட முடியவில்லையாயின், பின்னர் எதற்காக முன்னாள் இயக்கங்கள் என்னும் அடைமொழி? தியாகங்களால் உருப்பெற்ற வரலாற்றை சுமந்து கொண்டிருக்கும் முன்னாள் இயக்கங்கள், மிதவாதிகள் போடும் ஆசனங்களை எண்ணிக் கொண்டிருப்பதைவிடவும், தங்களின் இயக்க அடையாள கட்சிகளை கலைத்துவிட்டு செல்லவது பெருமையானது.

இன்றும் இயக்கங்களை பிரதிநித்துவம் செய்பவர்களுக்கு முதன்மையான பொறுப்புண்டு. ஏனெனில் தமிழ் சமூகம் அரசியல்ரீதியில் இன்று வந்திருக்கும் இடத்திற்கு அனைவருக்குமே பொறுப்புண்டு. விடுதலைப் புலிகளுக்கு முதன்மையான பொறுப்புண்டு. உண்மையில் 2009இல் பேரழிவு ஒன்றை சந்தித்த போது, விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்போர், சார்பற்ற சுயவிமர்சனமொற்றிற்கு சென்றிருக்க வேண்டும். ஆனால் அதற்கு யாருமே தயாராக இருந்திருக்கவில்லை. இல்லாதவர் இருக்கின்றார் என்று கூறி, அரசியல் மாயைகளை கட்டமைப்பதிலேயே சிலர் கவனம் செலுத்தினர். இதன் விளைவைத்தான் இன்று தமிழர் அரசியல் எதிர்கொண்டிருக்கின்றது. இன்று அனைத்து இயங்கங்களும் ஒரு புள்ளியில்தான் வந்து சேர்ந்திருக்கின்றன அதாவது, தியாகங்கள் பெறுமதியற்றுப் போனமைக்கு, இருப்பவர்கள் வெறும் சாட்சியாகியிருக்கின்றனர். இப்போது ஒரு வழிமட்டுமே இருக்கின்றது. அதாவது, முன்னாள் இயக்கங்களின் இப்போதைய தலைமைகள், தங்களது ஒவ்வொரு இயக்கங்களினதும், முடிவுகளுக்காக மாண்டு போனவர்களது தியாகங்களை மதிப்பது உண்மையாயின், அனைவரும் ஓரணியில் சங்கமிக்க வேண்டும். ஆளுமைமிக்க ஜனநாயக அரசியல் பாதையொன்றை வகுக்க வேண்டும். முயன்றால், இது முடியாத காரியமல்ல.

ஒரு வரலாற்றியலாளன் என்பவன், வரலாற்றை அதன் போக்கில் சென்று நோக்க வேண்டும் என்பார் வரலாற்றியல் அறிஞர் ஈ.எச்.கார். ஒரு அரசியல் வரலாற்று மாணவன் என்னும்வகையில், கடந்தகால வரலாற்றை அதன் போக்கில் நோக்கினால், இயக்கவழிப் பாதையில் எவருமே புனிதர்களல்லர். அனைவரது பக்கத்திலும் தவறுகள் உண்டு. அந்த தவறுகள் என்னவென்பது அந்த இயக்கங்களில் எஞ்சியிருப்போர்களுக்கு தெரியும். ஆனால் அனைத்து தவறுகளிலிருந்தும் பாடங்களை படிக்க வேண்டிய நிர்பந்தத்தை வரலாறு அவர்கள் மீது சுமத்தியிருக்கின்றது. வரலாற்று சுமையை இறக்கி வைப்பது தொடர்பில்தான் அவர்கள் இப்போது சிந்திக்க வேண்டும். வரலாறு மனிதர்களால்தான் உருவாக்கப்படுகின்றது. மனிதர்கள் உருவாக்கிய வரலாற்றின் திசைவழியை, மனிதர்களால் மாற்றியமைக்கவும் முடியும். தமிழ் இயக்கங்களின் வரலாறென்பது, ஒரு புறம் தியாகங்களால் உருப்பெற்ற வரலாறாக இருக்கும் போது, மறுபுறம், அது ஒரு இரத்தக்கறை படிந்த வரலாறு, கொலைகளை ஆராதித்த வரலாறு, மனித உரிமைகளை போற்றாத வரலாறு, அரசியல் தீண்டாமைகளை போற்றிய வரலாறு, குற்றவுணர்விற்கு அச்சம்கொள்ளாத வரலாறு. தமிழ் அரசியல் வரலாற்றின் இந்தப் பக்கமே, மறுபுறம், இயக்கங்களின் தியாகங்களை பெறுமதியற்றதாக்கியிருக்கின்றது. முன்னாள் இயக்கங்கள் அனைத்தும், ஜனநாயக நீரோட்டத்தில் ஒன்றுபட்டால், இந்த வரலாற்று கறைகளை சீர்செய்ய முடியும்.

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

06) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

i) நான் ........................................ (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் ................................................... (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

07) பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.

i) ஆற்றிலே போட்டாலும் .........................................................................

ii) ...................................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.

i) பலா கன்று போல பயிர் : ..........................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : ................................................. (2 புள்ளிகள்)

09) பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.

i) தம்பி தண்ணீரை ............................... (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................ (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

10) தனிச்சொல்லை எழுதுக.


i) வீண் செலவு செய்பவன் : ..............................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : .................................................... (2 புள்ளிகள்)

11) கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

i) Bread : ............................ ii) Cloud : ............................ (2 புள்ளிகள்)

12) தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.

i)  ..................................

ii)  ..................................

(2 புள்ளிகள்)

13) பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.

i) do / like? / What / you : ...........................................................................

ii) old / How / you? / are : ........................................................................................ (2 புள்ளிகள்)

14) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

i) ரோஹல : ..............................................................

ii) தொளஹ : ........................................................ (02 புள்ளிகள்)

15) பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

i) சோறு சாப்பிடுங்கள் : ........................................................................................

ii) அங்கே பாருங்கள் : ........................................................................................ (02 புள்ளிகள்)

❖ விடை எழுதுக.

16) 7 8 / 3 0 — இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

..............................................................

17) ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

..................................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 06. | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| 07. | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| 08. | 1) நாற்று | 2) தாள் | |
| 09. | 1) மடமட | 2) தக தக | |
| 10. | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| 11. | 1) பாண் | 2) முகில் | |
| 12. | 1) Star | 2) Table | |
| 13. | 1) What do you like? | 2) How old are you? | |
| 14. | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| 15. | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| 16. | 8 730 | 17. 7 309 | |

கல்வி tv CHANNEL-1

**28.05.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**28.05.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |





# ஓட்டமாவடி அதிபர்கள், ஆசிரியர்கள் நேற்று வீதியை மறித்து போராட்டம்!

## பாடசாலை செல்ல பெற்றோல் வழங்கக் கோரி

**மட்டக்களப்பு, ஜூன் 28**

**மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திற்குட்பட்ட ஓட்டமாவடி கோட்டப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் பெற்றோல் வழங்கக் கோரி நேற்று திங்கட்கிழமை ஓட்டமாவடி மணிக்கூட்டு கோபுரச் சந்தியில் போராட்டம் மேற்கொண்டனர்.**

ஓட்டமாவடி பிரதேச சபை முன்பாக இரு பக்கமும் வீதியை மறித்து ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதி வழியாக ஓட்டமாவடி மணிக்கூட்டு கோபுரம் வரை சென்று நான்கு பக்கமும் உள்ள வீதியை மறித்து வீதியில் அமர்ந்து சுமார் இரண்டரை மணி நேரம் அவர்கள் போராட்டம் மேற்கொண்டனர்.

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வரும் நிலையிலும், கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளை வழமை போன்று இயக்குமாறு மாகாணப் பணிப்பாளர் அறிவித்த நிலையில் பாடசாலைக்கு செல்வதற்கு அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு எரிபொருள் இல்லாத நிலைமை காணப்படுகின்றது.

இதனால் தங்களுக்கு உரிய எரிபொருளினை வழங்கக்கோரி இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். தங்களது பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத் தில் ஆசிரியர்களுக்கு எரிபொ ருள் வழங்கும்போது ஓட்டமா வடி கோட்டப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் சென்றவேளை தகாத வார்த்தைப் பிரயோகங்களை பாவித்து அனுப்பப்பட்டதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

போராட்ட இடத்திற்கு வருகை தந்த ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா, கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எம்.முஸம்மில் ஆகியோரிடம் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் பெற்றோல் பெற்றுக் கொடுக்குமாறு கோரி மகஜர் கையளித்தனர்.

இதில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா, கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எம்.முஸம்மில் ஆகியோரால் தங்களது பிரதேசத்திலுள்ள நான்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பெற்றோல் வரும் பட்சத்தில் முன்னுரிமை அடிப்படையில் வாரத்துக்கு ஐந்து லீற்றர் வீதம் வழங்கப்படும் என்று வாக்குறுதி வழங்கியதை அடுத்து போராட்டம் இடைநிறுத்தப்பட்டது.மட்டக்களப்பு-கொழும்பு பிரதான வீதியை மறித்து இரண்டரை மணி நேரம் நடந்த போராட்டத்தால் வீதிப் போக் குவரத்து முற்றாக பாதிக்கப் பட்டது. (அ)

# அட்டாளைச்சேனை கூட்டுறவு சங்கத்தில் ஊழல் மோசடிகள்!

## மாற்றத்திற்கான முன்னணி குற்றச்சாட்டு

அம்பாறை, ஜூன் 28

அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஆட்சி அதிகாரங்கள் ஒரு குறிப்பட்ட குடும்பத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்துகொண்டு கடந்த 12 வருடகாலமாக அதன் செயற்பாடுகள் யாவும் மழுங்கடிக்கப்பட்டு பாரியளவு ஊழல் மோசடிகளை செய்துவந்தவர்களின் கபடத்தனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அட்டாளைச்சேனை மாற்றத்திற்கான முன்னணியின் செயலாளர் அஸ்வர் சாலி தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு மீனோடைக்கட்டு மாற்றத்திற்கான முன்னணியின் காரியாலயத்தில் இடம்பெற்றபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 12 வருடங்களாக அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், தீகவாபி, திராய்க்கேணி போன்ற பிரதேங்களுக்கு செய்த சேவைகள் என்னவென்று பார்த்தால் அது பூச்சியமாகத்தான் இருக்கின்றது. 55 நபர்களைக் கொண்டு இயங்கிய அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் இன்று 4 நபர்களைக்கொண்டு இயங்கி வருகின்றது. இதுதொடர்பில் எமது பிரதேச மக்கள் மிக ஆழமாக சிந்திக்கவேண்டும்.

மர்ஹூம் ஜமால்டீன் அதிபரின் காலத்தில் 55 பேரைக் கொண்டு இயங்கிய சங்கம் இன்று 4 பேராக இயங்கிவரக் காரணம் என்ன? இதுபற்றி அன்று சிந்தித்தார்களா? அவ்வாறு சிந்தித்திருந்தால் அன்றே ஒரு மாற்றத்தை கொண்டுவந்திருக்க முடியும். இன்று பெரியதொரு போராட்டத்தை முன்னெடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், குடும்பத்தின் ஆட்சியாக நிலைநிறுத்தப்பட வேண்டும் என்ற சிந்தனையிலேயே அவர்களின் செயற்பாடுகள் இன்றுவரை இருக்கின்றன. மக்கள் நலன் சார்ந்த விடயங்களைப் பற்றியோ, சங்கத்திற்கு இலாபம் ஈட்டுகின்ற செயற்பாடுகளைப் பற்றியோ ஒருநாளும் சிந்தித்ததும் இல்லை, சிந்திக்கப்போவதும் இல்லை. அவ்வாறு சிந்தித்திருந்தால் ஏனைய பிரதேசங்களில் இருக்கின்ற பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களைப்போன்று இன்று முன்னிலை சங்கமாக இருந்திருக்கும்.

12 வருடங்களுக்கு முன்னர் கிழக்கு மாகாண கூட்டுறவுச் சங்கங்களில் முதல் நிலையில் இருந்த அட்டாளைச்சேனை கூட்டுறவுச்சங்கம் இன்று சொல்லமுடியாத நிலையில் இருக்கின்றது. அதற்கான காரணங்களைச் தேடிப்பார்த்தால் அங்கு அநியாயங்களும், களவுகளும், கொள்ளைகளும், குடும்ப மாபியாக்களுமே இடம்பெற்றுவந்துள்ளன. குறிப்பாக, சுயநல இலாபம் கருதியும், குடும்பங்களையும், அவர்கள் சார்ந்தவர்களையும், முன்னேற்றும் செயற்பாடுகளிலேயே இருந்து வந்துள்ளார்கள். இந்த செயற்பாடுகளை மாறைப்பதற்காக 55 நபர்களைக் கொண்ட சபை உறுப்பினர்களை 4 பேராக இயங்க வைத்துள்ளார்கள்.

அவர்களின் இந்தப்போக்கை கண்டித்தும், எதிர்த்தும் அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், திராய்க்கேணி, திகவாபி போன்ற பிரதேச மக்கள் மாற்றத்திற்கான முன்னணியுடன் இணைந்து இன்று பாரிய போர்க்கொடியை எந்திவருகின்ற நிலைமை உருவாகியுள்ளது-என்றார். (அ)

# சட்டவிரோதமாக ஆஸி. செல்ல முயன்ற 54 பேர் நேற்று கிழக்குக் கடலில் கைது!

மட்டக்களப்பு, ஜூன் 28

அவுஸ்ரேலியாவிற்கு சட்டவிரோதமான முறையில் செல்ல முற்பட்ட 54 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பு-பாலமின்மடுப் பகுதியில் கடற்படையினர் முன்னெடுத்த சுற்றி வளைப்பில் அவர்கள் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் திருகோணமலை துறைமுகத்துக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை காரணமாக பலர் இந்தியா மற்றும் அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக முயல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)



# எரிபொருள் வரிசை மீது பஸ் மோதி 5 பேர் காயம்

மட்டக்களப்பு, ஜூன் 28

மட்டக்களப்பு-ஊறணி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 5 பேர் வரையில் காயமடைந்துள்ளதுடன், 5 மோட்டார் சைக்கிள்கள் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எரிபொருள் நிரப்பு நிலைய வளாகத்திற்கு முன்னால், நேற்றுக் காலை வரிசையில் தரித்திருந்த வாகனங்கள் மீது வீதியில் பயணித்த தனியார் பஸ் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

செங்கலடியிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)



# ரஷ்யாவிடம் இருந்து தங்க இறக்குமதிக்கு தடை விதிக்க ஜி-7 நாடுகள் கூட்டாக முடிவு!

நியூயோர்க், ஜூன் 28

ரஷ்யா மீதான பொருளாதா ரத் தடைகளை மேலும் கடுமை யாக்கும் வகையில் ரஷ்யாவி டம் இருந்து தங்கத்தை இறக்கு மதி செய்ய அமெரிக்கா உள் ளிட்ட ஜி-7 நாடுகளின் குழு தடை விதிக்கும் என ஜனாதி பதி ஜோ பைடன் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

இது உக்ரைன் மீதான ஆக் கிரமிப்பு போரை தொடுத் துள்ள ரஷ்யாவை பொருளா தார ரீதியாக மேலும் தனி மைப்படுத்தும் என ஜி-7 தலைவர்கள் நம்பிக்கை வெளி யிட்டுள்ளனர்.

அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், பிரிட்டன் ஆகிய 7 நாடுகள் உறுப்பினர்களாக உள்ள ஜி-7 அமைப்பின் 48 ஆவது உச்சி மாநாடு ஜேர்மனி யின் ஸ்லாஸ் எல்மவ் நட்சத்திர விடுதியில் நேற்று முன் தினம் தொடங்கியது. தொடர்ந்து நேற்றும் இன்றும் இந்த மாநாடு இடம்பெறவுள்ளது.

இன்னிலையில் மாநாட்டின் இறுதி நாளான இன்று செவ் வாய்க்கிழமை ரஷ்யாவிடம் இருந்து தங்கத்தை இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கும் முடிவை ஜி-7 தலைவர்கள் கூட்டாக அறிவிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

தங்க ஏற்றுமதி ரஷ்யாவிற்கு பல்லாயிரக்கணக்கான டொலர் களை சம்பாதித்து கொடுக்கி றது. ரஷ்யாவிடம் இருந்து தங்கத்தின் இறக்குமதியை நாங் கள் தடைசெய்வோம். இதனை ஜி7 நாடுகள் கூட்டாக அறிவிக் கும் என அமெரிக்க ஜனாதிபதி பைடன் ட்விட்டரில் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய தங்கத்தின் மீதான தடை ரஷ்ய தன்னலக்குழுக்களை நேரடியாக தாக்கும் மற்றும் புடினின் போர் இயந் திரத்தின் இதயத்தில் தாக்கும் என பிரிட் டிஷ் பிரதமர் போரிஸ் ஜோன் சன் கருத்து வெளியிட்டுள்ளார்.

அர்த்தமற்ற மற்றும் காட் டுமிராண்டித்தனமான போரில் புடின் வளங்களை வீணடிக்கி றார். எனவே, பொருளாதார ரீதியில் அவருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம் எனவும் போரிஸ் ஜோன்சன் தெரிவித்தார்.

சக ஜி-7 உறுப்பு நாடுகளான கனடா, ஜப்பான் மற்றும் அமெரிக்காவுடன் இணைந்து எடுக்கப்பட்ட கூட்டு நடவடிக் கையாக பிரிட்டனால் இந்த நடவடிக்கை ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்டதாக கூறப் படுகிறது.

எரிசக்திக்கு அடுத்தபடியாக, ரஷ்யாவிற்கு இரண்டாவது பெரிய வருவாயை ஈட்டித் தருவது தங்க ஏற்றுமதியாகும். புடின் மற்றும் ரஷ்யாவிற்கு குறிப்பிடத்தக்க வருவாய் ஆதா ரமாக தங்க ஏற்றுமதி உள்ளது என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வங்கிகள், எரிசக்தி நிறுவ னங்கள், விமான நிறுவனங்கள், உயர் தொழில்நுட்பம் மற்றும் நுகர்வோர் பொருட்களுக்கு எதிரான மேற்கத்திய நாடுக ளின் பொருளாதாரத் தடைக ளால் ரஷ்யாவின் பொருளா தாரம் ஏற்கனவே பெரும் அழுத் தத்தில் உள்ளது.

இப்போது, தங்கச் சந்தையி லும் தடை என்பது ரஷ்யாவின் பொருளாதாரத்தில் குறிப்பிடத் தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகிறது. (அ)

# தென்னாபிரிக்கா களியாட்ட விடுதியில் பதின்ம வயதினர் 22 பேர் மர்ம மரணம்!

## பெரும்பாலானோர் 13,14 வயதானவர்கள்



கேப் ரவுன், ஜூன் 28

தென்னாபிரிக்காவில் உள்ள இரவு களியாட்ட விடுதி ஒன் றில் பதின்ம வயதினர் 22 பேர் மர்மமாக உயிரிழந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள் ளனர்.

இவர்களின் பெரும்பாலா னோர் 13 மற்றும் 14 வயதா னவர்கள் என தெரியவருகிறது.

தெற்கு கடற்கரை நகரமான கிழக்கு லண்டனில் உள்ள இரவு கேளிக்கை விடுதி மற்றும் மது பான விடுதியில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 22 பதின்ம வயதி னர் இறந்து கிடந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது.

அவர்கள் இறந்தது எவ் வாறு? என்பது குறித்து தென் னாப்பிரிக்க பொலிஸார் மற் றும் தடயவியல் குழுக்கள் விசாரணை நடத்தி வருகின்றன.

பதின்ம வயதுக் குழுவினர் தமது பள்ளி ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி ஒழுங்கு செய் திருந்த களியாட்ட நிகழ்வி லேயே இந்த அசம்பாவிதம் நடந்துள்ளது. அவர்கள் எவ் வாறு இறந்தனர்? என்ற தகவல் கள் இதுவரை வெளியாக வில்லை. இரவு விடுதியில் ஏதோ வொரு அசம்பாவிதம் நடந் துள்ளதாக உள்ளூர்வாசிகள் அதிகாலை 4 மணியளவில் எச்சரிக்கையை எழுப்பியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

22 இளம் பராயத்தினர் இறந்து கிடக்கும் செய்தி அறிந்து ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முதலே அவர்களின் பெற்றோர், உறவினர் விடுதி முன்பு கோபத்துடன், திரண்ட தால் பரபரப்பு ஏற்பட்டது. அவர்களைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் முயன்றனர்.

முதலில் நெரிசலால் மரணங்கள் சம்பவித்ததாக முத லில் எங்களுக்குத் தெரிவிக் கப்பட்டது. ஆனால் அங்குள்ள சூழ்நிலையை அவதானித்ததில் எந்த நெரிசலும் ஏற்படவில்லை என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இறப்புக்கான காரணத்தை நாங்கள் ஊகிக்க விரும்பவில்லை. தடயவியல் நிபுணர்கள் சம்பவ இடத்தை ஆராய்ந்து வருகின் றனர். உணவில் விஷம் இருந் ததா? போன்ற தகவல்களை விசாரணைகளின் பின்னரே தெரிவிக்க முடியும் எனவும் பொலிஸார் கூறினர்.

பிரேத பரிசோதனையில் இரவு விடுதியில் என்ன நடந்தது? என்பது பற்றிய தெளிவான தகவல்கள் வெளியாகலாம் எனவும் எதிர் பார்க்கப்படுகிறது. (அ)

# கொலம்பியாவில் காளை பந்தய போட்டியில் பார்வையாளர் பகுதி இடிந்து 4 பேர் மரணம்!



பகோட்டா, ஜூன் 28

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் காளை ஓட்டப் பந்தய போட்டியின் போது மூங் கில் மற்றும் மரப்பலகைக ளால் அமைக்கப்பட்ட பார்வையாளர்கள் அமரும் பகுதி உடைந்து விழுந்ததில் 4 பேர் பலியானதுடன், 70 க்கும் மேற்பட்டோர் காய மடைந்தனர்.

கொலம்பியாவின் எல் எஸ் பினல் நகரத்தில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத் தில் இரண்டு பெண்கள், ஒரு ஆண் மற்றும் ஒரு சிறுவன் உயிரிழந்ததாக டோலிமா மாகாண ஆளுநர் ஜோஸ் ரிக்கார்டோ ஓரோஸ்கோ உள்ளூர் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு உடன டியாக அருகில் உள்ள மருத்தவமனைக்கு அனுப்பிவைக்கப்பட் டனர். பார்வையாளர்கள் அமரும் பகுதி உடைந்து விழுந்ததை அடுத்து பலர் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டது. பின்னர் அனைவரும் கண்டுபிடிக்கப்பட்டனர் என டோலிமா மாகாண சிவில் பாதுகாப்புப் பணிப்பாளர் மேஜர் லூயிஸ் பெர்னாண்டோ வெலஸ் குறிப்பிட்டுள்ளார். (அ)

# நூற்றாண்டில் முதல் முறையாகக் கடனை திருப்பி செலுத்தமுடியாது தவிக்கும் ரஷ்யா

மொஸ்கோ, ஜூன் 28

உக்ரைன் மீது போர் தொடுத்ததால் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் பொரு ளாதார தடையால் கடும் நெருக்கடியை சந்தித்து வரும் ரஷ்யா, ஒரு நூற்றாண் டில் இதுவரை இல்லாத வகையில் முதன் முறையாக தனது வெளிநாட்டுக் கடனை திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த சூழலால் உலகம் முழு வதுமே பொருளாதார அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் தங்கம், கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்தது. உக்ரைன் மீதான தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ரஷ்யாவிலிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதிக்கு தடை விதிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்தார்.

ரஷ்யாவின் கச்சா எண்ணெயை வாங்க அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் மறுத்துள்ளதால் ரஷ்யா மலிவு விலையில் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு குறைந்த விலையில் கச்சா எண்ணெய் விற்பனை செய்கிறது. இதுமட்டுமின்றி ரஷ்யா மீது கடுமையான பொருளாதார தடைகளும் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளால் விதிக் கப்பட்டுள்ளன. பொருளாதாரத் தடைக ளைத் தொடர்ந்து உலக நிதிய அமைப் பில் இருந்து ரஷ்யா அந்நியப்பட்டுள்ளது. இதனால் பெரும் பொருளா தார நெருக் கடியை அந்நாடு சந்தித்து வருகிறது.

இந்தநிலையில் கடந்த நூற்றாண்டில் இல்லாதவகையில் ரஷ்யா தனது வெளி நாட்டு நாணய கடனை முதன்முறையா கத் திருப்பிச் செலுத்தவில்லை. உக்ரைன் படையெடுப்பிற்குப் பிறகு விதிக்கப் பட்ட அபராதங்களுக்கு பிறகு மே 27 அன்று வட்டி செலுத்துவதற்கான 30 நாள் சலுகைக் காலமான நேற்று முன் தினம் இரவு காலக்கெடுவுக்குள் ரஷ்யா செலுத்த தவறிவிட்டது.

ரஷ்யா சுமார் 40 பில்லியன் டொலர் வெளிநாட்டுப் பத்திரங்கள் மூலம் கடன் வாங்கியுள்ளது. அதில் பாதி வெளிநாட்டவர்களுக்குக் கொடுக்கவேண்டியது. ரஷ்யாவின் கையிருப்பில் உள்ள டொலர் உள்ளிட்ட பெரும்பாலான வெளிநாட்டு நாணயம் மற்றும் தங்க கையிருப்பு வெளிநாடுகளில் தற்போது முடக்கி வைக்கப்பட்டுள்ளது. இதனால் அதன எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நெருக்கடியை சந்திக்க சந்திக்க தன்னிடம் பணம் இருப்பதாக ரஷ்யா கூறி வருகிறது. "இது நட்பற்ற நாடுகளால் செயற்கையாக உருவாக்கப்பட்ட நிலைமை. இதனால் ரஷ்யர்களின் வாழ்க்கைத் தரத் தில் எந்த விளைவும் ஏற்படாது. எங்களி டம் பணம் உள்ளது, கடன் தொகையை செலுத்த தயாராக உள்ளோம்" என்று ரஷ்ய நிதி யமைச்சர் அன்டன் சிலுவா னோவ் கடந்த மாதம் கூறினார்.

ஆனால் சர்வதேச கடன் கொடுத்தவர் களுக்கு பணம் செலுத்தும் வழிகளை மேற்குநாடுகள் மூடியுள்ளதால் பணம் செலுத்த முடியாத நிலைக்கு அந்நாடு தள்ளப்பட்டுள்ளது. போல்ஷிவிக் புரட் சியின் போது ரஷ்ய பேரரசு வீழ்ச்சிய டைந்து சோவியத் யூனியன் உருவாக்கப் பட்டபோது ரஷ்யா கடைசியாக சர்வ தேச கடனை திருப்பி செலுத்தவில்லை.

ஈழநாடு





# ஓய்வு பெறுகிறார் இயன் மோர்கன்?

லண்டன், ஜுன் 28

காயம் மற்றும் மோசமான துடுப்பாட்டம் போன்ற காரணங்களால் இங்கிலாந்து அணியின் தலைவர் இயன் மோர்கன், ஓய்வு அறிவிப்பை விரைவில் வெளியிட வுள்ளாரெனக் கூறப்படுகின்றது.

2019இல் இயன் மோர்கன் தலைமையிலான இங்கிலாந்து அணி ஒருநாள் கிண்ணத்தை வென்றது. 35 வயது மோர்கன் காயம் மற்றும் சரியாக விளையாடாத காரணங்களால் இந்த வருடம் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளார்.

அண்மையில், நெதர்லாந்துக்கு எதிராக இருமுறை டக் அவுட் ஆனார். 3ஆவது போட்டியில் காயம் காரணமாக விளையாடவில்லை. வெள்ளைப் பந்து கிரிக்கெட்டில் கடந்த 28 இனிங்ஸ்களில் இரு அரைச் சதங்கள் மட்டுமே எடுத்துள்ளதால் அவர் மீது விமர்சனங்கள் உருவாகியுள்ளன.

இங்கிலாந்து அணியின் வெள்ளைப் பந்து தலைமைப் பயிற்சியாளர் மத்தியூ மேட், இங்கிலாந்து கிரிக்கெட்டின் இயக்குநர் ராப் கீ ஆகியோர் மோர்கனுக்கு ஆதரவுக்குரல் எழுப்பினாலும் தற்போதைய நிலைமையில் தலைமைப் பதவியிலிருந்து விலகுவது மட்டுமல்லாமல் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வு பெறவும் மோர்கன் முடிவெடுத்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதையடுத்து 2015 முதல் உப அணித்தலைவராக உள்ள ஜோஸ் பட்லர், இங்கிலாந்து அணியின் புதிய தலைவராக நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# அயர்லாந்துடனான ரி-20 இந்தியா இலகு வெற்றி!

டப்ளின், ஜுன் 28

அயர்லாந்து கிரிக்கெட் அணிக்கு எதிரான முதல் இருபது - 20 போட்டியில் இந்தியா 7 விக்கெட்களால் இலகு வெற்றி பெற்றது.




அயர்லாந்து சென்றுள்ள இந்திய அணி இரு போட்டி கள் கொண்ட இருபது - 20 தொடரில் விளையாடுகிறது. இதன் முதல் போட்டி டப்ளினில் நேற்றுமுன்தினம் நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் களத் தடுப்பை தெரிவு செய்தது. மழையின் குறுக்கீட் டால், போட்டி 12 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது.

புவனேஸ்வர் குமார், யஸ்வேந்த்ர சஹால் ஆகியோ ரின் மிகவும் கட்டுப்பாடான பந்து வீச்சுகளும் தீபக் ஹூடாவின் சிறந்த துடுப்பாட்டமும் இந்தியாவுக்கு இலகுவான வெற்றியை ஈட்டிக் கொடுத்தன.

முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து, ஹரி டெக்டரின் அதிரடி துடுப்பாட்ட உதவியுடன் 12 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றது. 4ஆவது ஓவரில் மொத்த எண்ணிக்கை 22 ஓட்டங்களாக இருந்தபோது 3ஆவது விக்கெட்டை இழந்த அயர்லாந்து பெரும் தடுமாற்றத்தை எதிர் கொண்டது. ஆனால், ஹரி டெக்டர், லோர்க்கன் டக்கர் ஆகிய இருவரும் 4ஆவது விக்கெட்டில் 29 பந்துகளில் 50 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியைப் பலப்படுத்தினர். தொடர்ந்து ஹரி டெக்டரும் ஜோர்ஜ் டொக்ரெலும் பிரிக்கப் படாத 5ஆவது விக்கெட்டில் 20 பந்துகளில் 36 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

துடுப்பாட்டத்தில் ஹரி டெக்டர் 33 பந்துகளில் 6 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக 64 ஓட்டங் களுடன் ஆட்டமிழக் காதிருந்தார். லோர்க்கன் டக்கர் 18 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் யஸ்வேந்த்ர சஹால் 11 ஓட்டங் களுக்கு ஒரு விக்கெட்டையும் புவனேஷ்வர் குமார் 16 ஓட்டங் களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். 109 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்தியா 9.2 ஓவர்களில் 3 விக்கெட் களை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

தீபக் ஹூடா, இஷான் கிஷன் ஆகிய இருவரும் 16 பந்துகளில் 30 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை இட்டுக் கொடுத்தனர். இஷான் கிஷன் 11 பந்துகளில் 3 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 26 ஓட்டங் களைப் பெற்று ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து சூரியகுமார் யாதவ் ஓட்டம் பெறாமல் வந்த வழியே நடையைக் கட்டினார்.

தீபக் ஹூடாவுடன் இணைந்த அணித் தலைவர் ஹார்திக் பாண்ட்யா 3ஆவது விக்கெட்டில் 31 பந்து களில் 64 ஓட்டங்களைப் பகிர்ந்து வெற்றி இலக்கை அண்மிக்க செய்தார். ஹார்திக் பாண்ட்யா 12 பந்துக ளில் 3 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 24 ஓட்டங்களைப் பெற்றார். தொடர்ந்து தீபக் ஹூடாவும் தினேஷ் கார்த்திக்கும் இணைந்து இந்தியாவின் வெற்றியை உறுதிசெய்தனர்.

29 பந்துகளை எதிர்கொண்ட தீபக் ஹூடா 6 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 47 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதிருந்தார். தினேஷ் கார்த்திக் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

இரண்டு அணிகளுக்கு இடையிலான 2ஆவதும் கடைசியுமான சர்வதேச இருபது 20 கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறவுள்ளது. (ஐ)

# நியூசி. - இங்கிலாந்து டெஸ்ட் மழையால் ஆட்டம் பாதிப்பு!




லீட்ஸ், ஜுன் 28

நியூசிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெறுவதற்கு 113 ஓட்டங்கள் தேவைப்படுகின்றன. ஆனால், இறுதிநாளான நேற்று மழையால் ஆட்டம் தொடங்குவது தாமதமானது. (இந்த செய்தி எழுதப்படும்வரை போட்டி ஆரம்பமாகவில்லை)

முன்னதாக, நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

முதல் இனிங்ஸில் அந்த அணி 329 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய இங்கிலாந்து அணி 360 ஓட்டங்களைப் பெற்று 31 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

இரண்டாவது இனிங்ஸில் நியூசிலாந்து தடுமாறிய போதிலும் போராடி 326 ஓட்டங்களை எடுத்தது. இதையடுத்து பதிலுக்கு ஆடிய இங்கிலாந்து அணி 2 விக்கெட்களை மட்டும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், நான்காம் நாள் ஆட்டம் நிறைவடைந்தது.

ஒல்லி போப் 81, ஜோ ரூட் 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இவர்கள் ஐந்தாவது மற்றும் இறுதிநாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடி இருந்தனர். ஆனால், மழை காரணமாக இந்த செய்தி எழுதப் படும் வரை போட்டி தொடங்க வில்லை.

இதேவேளை, 3 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில், இரு போட்டிகளில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி ஏற்கனவே தொடரைக் கைப்பற்றிவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




# ரோஹித்துக்கு பதில் மயங்க் அகர்வால்!

லண்டன், ஜுன் 28

ரோஹித் சர்மா கொரோனாவால் பாதிக்கப்பட்டதையடுத்து மாற்று ஏற்பாடாக மயங்க் அகர்வால் இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள இந்திய அணி ஒரு டெஸ்ட், 3 ஒருநாள், 3 இருபது - 20 போட்டிகளில் விளையாடுகிறது. இந்தப் போட்டி எதிர்வரும் ஜுலை முதலாம் திகதி தொடங்குகிறது.

இந்நிலையில், இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மாவுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனால், அவர் டெஸ்ட் போட்டியில் விளையாட மாட்டார். அவருக்குப் பதிலாக மயங்க் அகர்வால் இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்திய அணிக்காக 21 டெஸ்ட் போட்டிகள், 5 ஒருநாள் போட்டிகளில் அவர் விளையாடியுள்ளார். (ஐ)

# இன்று தொடக்கம் நாடு ஸ்தம்பிக்கும்!

### தொழிற்சங்கக் கூட்டமைப்பு எச்சரிக்கை

**கொழும்பு, ஜூன் 28**

**இன்று செவ்வாய்க்கிழமை முதல் நாடு ஸ்தம்பிக்கும் என ஒன்றிணைந்த தொழிற் சங்கக் கூட்டமைப்பின் செயலாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.**

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், எதிர்வரும் மூன்று வாரங்கள் கடினமானதாக இருக்கும் எனவும், பயணத்தை மட்டுப்படுத்துமாறும், எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்துமாறும் பொதுமக்களை வலியுறுத்தி ஜூன் 7ஆம் திகதி பிரதமர் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

இந்த மூன்று வாரங்கள் இன்றுடன் முடிவடைவதாகக் கூறிய பாலித, நாட்டில் எரிபொருளோ, எரிவாயுவோ இல்லை என்றும், இன்று நாடு அசைய முடியாத நிலைமைக்கு வரும் என்றும் கூறினார்.

ஜூன் 8 ஆம் திகதி 5,000 மெற்றிக் தொன் டீசல் மற்றும் 3,500 மெற்றிக் தொன் பெற்றோல் இறக்கமதி செய்யப்படுவதாக கூறப்பட்டது. ஆனால் 3,500 மெற்றிக் தொன் டீசல் மற்றும் 1,500 மெற்றிக் தொன் பெற்றோலே கொண்டு வரப்பட்டது. நாட்டின் தேவை 6,000 மெற்றிக் தொன்களுக்கும் அதிகமாக உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

11 மற்றும் 12 ஆம் திகதிகளில் எரிபொருள் கப்பல் வரும் என்று ஜூன் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் அறிக்கைகள் வெளியிடப்பட்டன. ஆனால் எரிபொருள் கப்பல்கள் இன்னும் இலங்கைக்கு வரவில்லை என்றும் அவர் கூறினார். (அ)



## அமெரிக்க உயர்மட்டக் குழு பிரதமர் ரணிலுடன் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 28

இலங்கையில் நிதி முகாமைத்துவத்திற்கான தொழில் நுட்ப உதவிகளை வழங்க அமெரிக்கா இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை வந்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் கெல்லி கெய்டர்லிங் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடினார்.

இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில் இடம் பெற்று வரும் பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவளிப்பதாக அமெரிக்க இராஜதந்திரக் குழு தெரிவித்துள்ளது.

பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் ஆசியாவுக்கான பிரதி உதவித் திறைசேரிச் செயலாளர் ரொபேர்ட் கப்ரோத், இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் பிரதமரின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.சமரதுங்க ஆகியோரும் பங்கேற்றனர். (அ)

## பிரசவ வலி ஏற்படும் வரை வீடுகளில் காத்திருக்காதீர்!

### கர்ப்பிணித் தாய்மார்களிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 28

கர்ப்பிணித் தாய்மார் பிரசவத்திற்கான வலி ஏற்படும் வரை வீடுகளில் காத்திருக்க வேண்டாம் என பிரசவ மற்றும் நரம்பியல் விசேட வைத்தியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சாதாரண பிரசவ முறையில் முதலாவது குழந்தையை பிரசவித்த தாய்மார், இரண்டாவது குழந்தையை பிரசவிப்பதற்கான காலம் குறைவடையக்கூடும் என பிரசவ மற்றும் நரம்பியல் விசேட வைத்தியர் வித்ய விபூசன தெரிவித்துள்ளார்.

கர்ப்பிணித்தாய்மாருக்கு பிரசவத்திற்கான அறிகுறிகள் தென்பட்டால் அவர்களை, உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு அவர் கோரியுள்ளார்.

எரிபொருள் இன்மையினால், வைத்தியசாலைக்கு செல்ல தாமதமான கர்ப்பிணித்தாய் ஒருவர் தமது 3 ஆவது குழந்தையை வீட்டில் பிரசவித்த சம்பவம் நிக்கவரட்டிய பகுதியில் நேற்றுமுன்தினம் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தலை துண்டிக்கப்பட்ட சடலம் நேற்று மீட்பு!

கொழும்பு, ஜூன் 28

அக்குரஸ்ஸ, திப்பட்டுவாவ பிரதேசத்தில் நேற்றுக் காலை தலைத்துண்டிக்கப்பட்ட நிலையில் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் 70 வயதான மாந்திரீகர் ஒருவரென பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்படி நபரை கொலை செய்த நபர், அந்நபரின் தலையை துண்டித்து, அவரது வீட்டுக்கு அருகில் ஓடும் நில் வள கங்கையில் வீசியுள்ளதாக இதுவரையான விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொலைச் சம்பவத்தோடு சம்மந்தப்பட்ட நபர், கொல்லப்பட்ட நபரின் வீட்டுக்கு அண்மையில் வசித்துவருபவரென அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தற்போது அப்பிரதேசத்திலிருந்து தலைமறைவாகியுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

காணி கொடுக்கல் வாங்கல் தொடர்பில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த கொலை இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. (அ)

## தீ விபத்தில் தம்பதி பலி!

கொழும்பு, ஜூன் 28

ஹோமாகம, மாகம்மன பிரதேசத்தில் இரண்டு மாடி வீடொன்றின் தரைத்தளத்தில் உள்ள அறையொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் கணவன், மனைவி உயிரிழந்துள்ளதுடன், அவர்களின் இரண்டு மகள்களும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 19 வயதுடைய மகள் காவிந்தி ரணசிங்கவின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தீ விபத்து ஏற்பட்டபோது இறந்தவரின் தாய் மற்றும் உறவினர்கள் வீட்டின் பக்கத்து பகுதியில் இருந்தனர்.

தீ விபத்துக்கான காரணம் சரியாக கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேசவாசிகளால் தீ அணைக்கப்பட்டதுடன், காயமடைந்தவர்கள் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

47 வயதான தந்தை உடனடியாக உயிரிழந்தார். 6 வயதான மகள் பொரளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

35 வயதான தாயும், 19 வயதான மகளும் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டனர். அங்கு தாயார் உயிரிழந்துள்ளார். (அ)

## நாட்டில் 6 வாரங்களுக்குள் 9 பேர் சுட்டுப் படுகொலை!

கொழும்பு, ஜூன் 28

நாட்டில் கடந்த 6 வாரங்களில் 9 பேர் சுட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவற்றில் பெரும்பாலான சம்பவங்கள், பாதாள குழுக்களுடன் தொடர்புடையது என தெரியவந்துள்ளது.

இந்நிலையில் பேலியகொடை, பட்டிய சந்தியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன் தினம் இரவு சுட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா மாவட்டத்துக்குட்பட்ட மினுவாங்கொடை பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய முன்னாள் பொலிஸ் அதிகாரி ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். (அ)

## கையிருப்பில் உள்ள மருந்துகளை மக்கள் வீண் விரயமாக்கக்கூடாது!

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 28

நாட்டில் நிலவும் நெருக்கடியான சூழ்நிலை காரணமாக மக்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

கையிருப்பில் இருக்கும் மருந்துகளை விரயமாக்காது தேவையான அளவுக்கு மாத்திரம் மக்கள் பயன்படுத்த வேண்டும் எனவும் அந்த சங்கம் கூறியுள்ளது.

கொழும்பில் இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்திய செயற்குழு உறுப்பினர் மருத்துவர் பிரசாத் கொலம்பகே இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மருந்துகளுக்கு தற்போது தட்டுப்பாடு நிலவுகிறது. போக்குவரத்து சிரமங்கள் காரணமாக மக்கள் மிகவும் கவனமாக வாழ வேண்டும் என்பது புரிந்துக்கொள்ள வேண்டிய விடயம்.

மருந்துகளை வீணாக்காது தேவையான அளவை பயன்படுத்துங்கள்.

இருக்கும்மருந்துகளை கவனமாக வைத்திருங்கள். வீணாக்காமல் இருக்கும் மருந்தை பயன்படுத்துங்கள்.

ஒரு பணியாக இருக்கலாம் அல்லது வீட்டு வேலையாக இருக்கலாம் மிக கவனமாக அவற்றை செய்யுங்கள்.

தற்போதைய சந்தர்ப்பத்தில் ஏதேனும் விபத்துக்கள் நேர்ந்தால், உங்களால் போக்குவரத்து வசதிகளை பெற்றுக்கொள்ள முடியாது போகும்.

அதேபோல் மருத்துவர்கள மற்றும் சுகாதார ஊழியர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்க முடியாது போகும்.

குழந்தைகளை கவனமாக பார்த்துக்கொள்ளுங்கள் விபத்துக்களுக்கு உள்ளானால், மக்கள் கஷ்டங்களுக்கு உள்ளாகும் வாய்ப்புகள் அதிகம்.

இதனால் இந்த சந்தர்ப்பதில் மிகவும் கவனமாக வாழுங்கள்.

கையிருப்பில் இருக்கும் மருந்துகள் போதுமானதாக இல்லை என்பதால், குழந்தைகளை மிக கவனமாக பார்த்துக் கொள்ளுங்கள்.

மொத்தமாக முழு நாட்டையும் எடுத்துக்கொண்டால், குறைந்தளவிலேயே மருந்துகள் கையிருப்பில் உள்ளன. போக்குவரத்து மற்றும் சுகாதார வசதிகள் சீர்குலைந்துள்ளதால், எமது உயிர் பாதுகாப்பு ஒரளவுக்கு ஆபத்தாக மாறியுள்ளது- என்றார். (அ)

## பாடசாலை போக்குவரத்து சேவை கட்டணமும் எகிறும்!

கொழும்பு, ஜூன் 28

எரிபொருள் விலை அதிகரிப்பால் பாடசாலை போக்குவரத்து சேவை கட்டணமும் அதிகரிக்கப்படும் என பாடசாலை போக்குவரத்து சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பு உட்பட நகர்பகுதிகளில் வாரம் மூன்று நாட்கள் பாடசாலை நடைபெறும் பகுதிகளில் கட்டண அதிகரிப்பு இடம்பெறாது, எனவும், ஐந்து நாட்களும் பாடசாலை இடம்பெறும் பகுதிகளில் கட்டண அதிகரிப்பு இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவருக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

அம்பாறை, ஜுன் 28

மருதமுனை மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆ பள்ளிவாசல் பரிபாலன சபையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட 2022 ஆம் ஆண்டு மருதமுனை பாடசாலைகளிலிருந்து க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய மாண வர்களுக்கான வழி காட்டல் கருத்தரங்கு மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆ பள்ளிவாசலில் பள்ளிவாசல் தலைவரும், கிராம அபிவிருத்தி உத்தி யோகத்தருமான எம்.ஐ.எம். முஹர்ரப் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது.

உயர்தரப் பிரிவில் பொருத்தமான கற்கை துறை களை தெரிவு செய்தலும் இலகுவாக பல்கலைக்கழக அனுமதி பெறக்கூடிய பாடங்களை தெரிவு செய்த லும் தொடர்பில் ஊவா வெல்லஸ்ஸ பல் கலைக்கழக பதி வாளர் எம்.எப் . ஹிபத் துல் கரீமும், தொழிநுட்ப துறையில் எதிர்கால வேலைவாய்ப்பினை நோக்கிய கற்கை நெறிகளை தெரிவு செய்தல் தொடர்பில் நிந்த வூர் தொழிற்பயிற்சி அதிகாரசபை நிகழ்ச்சித்திட்ட உத்தி யோகத்தர் எம்.எம் . மஹ்சூன் ஆகியோர் விரி வுரை நிகழ்த்தினர்.

மேலும் இளைஞர்களையும் மாணவர் களையும் பள்ளிவாசல்களுடன் தொடர் புபடுத்துதல் தொடர்பில் மௌலவி எம். எம். அப்துல் ஹமீட் (அஹ்சானி) உரை நிகழ்த்தியதுடன், மாணவர்கள் கடைப் பிடிக்கவேண் டிய அடிப்படை சட்ட விதி கள் பற்றி மருதமுனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.ஜீ. துஸார திலங்க ஜெயலால் விளக்கமளித்தார். (அ)

## எந்த...

ரஷ்யாவிடம் எரி பொருளை வாங்கு வது குறித்து பேச்சு நடத்துவது தொடர் பில் கருத்து வெளியிட்டபோதே சம்பிக்க தெரிவித்துள்ளார்.

“சர்வதேச அரங்கில் இலங்கை தனது பிம்பத்தை மீட்டெடுக்கும் வரை உலகில் உங்கிருந்தும் எரிபொருளை பெறமுடி யாது. ஊழலால் பெயர் கெட்டுவிட்டது. அமெரிக்காவில் உள்ள வங்கியொன்று ஏற்கனவே இலங்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.

உண்மையான பல கட்சி அரசாங் கமே இப்போது தேவை. எதிர்க்கட்சிகள் இணைந்து தேசத்தை மீட்டெடுக்க பங் களிக்க வேண்டும். அரசும் எதிர்க்கட்சி யும் ஒன்றிணைய வேண்டும்” - என்றும் அவர் கூறினார். (ஐ)

## சர்வதேச...

எரிபொருள் இறக்குமதி புதிதாக இன் மையால் இந்த வாரத்தில் இருந்து நாடு முற்றாக ஸ்தம்பிக்கும் நிலை ஏற்படும். பொதுப் போக்குவரத்துக்கூட நிறுத்தப் படலாம் என்றும் கூறப்படுகின்றது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கையிருப்பில் 1,100 தொன் பெற்றோல், 7,500 தொன் டீசல் மட்டுமே உள்ளன. இந்தத் தொகை நாட்டுக்கு ஒருநாள் தேவைக்குக்கூட போதாது என்று பெற் றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற் சங்க உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித் தன.

கடந்த 23ஆம் திகதி இலங்கைக்கு எரி பொருள் தொகை கிடைப்பதாக இருந் தது. ஆனால், சர்வதேச உத்தரவாதம் இன்மையால் எரிபொருள் கப்பல் நாட் டுக்கு வரவில்லை என்று கடந்த வாரம் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார். இது உள்ளூர் வங்கியின் உத்தரவாதத்துடனேயே அனுப்பப்பட்டி ருந்தது.

இந்நிலையில், இலங்கை வெளிநாட் டுக் கடன்களை செலுத்துவதில்லை என்று முடிவெடுத்துள்ளது. இதனால், இலங்கை சர்வதேச நிறுவனங்களால் கறுப்புப் பட் டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. இதனால், புதிதாக எரிபொருள் இறக்குமதி இப் போதைக்கு சாத்தியப்படாது.

தற்போது எஞ்சியுள்ள எரிபொருள் அத்தியாவசிய சேவைகளுக்கு முன்னு ரிமை அடிப்படையில் வழங்கப்படவுள் ளது. இதனால், பொதுமக்களுக்கு வழங் கப்படும் டோக்கன் முறைமை பயனற்றது.

எரிபொருள் இன்மையால், பொதுப் போக்குவரத்து நிறுத்தப்படும் அதேசம யம், எரிபொருள் கையிருப்பில் இல்லாத தால் நீண்ட மின்வெட்டும் விரைவில் நடை முறைக்கு வரலாம் என்றும் அந்த வட்டா ரங்கள் தெரிவித்தன. (ஐ)

## ராஜபக்ஷ...

விக்கிரமசிங்க தெரிவித்தார்.

“நாட்டின் தற்போதைய பொருளா தார நெருக்கடிக்கு இவ்வருடத்துக்குள் தீர்வு கிடைக்குமா?” என்று தென்னி லங்கை ஊடகம் ஒன்று பிரதமரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

”கடந்த தேர்தல் காலங்களில் நாட்டு மக்களுக்கு ராஜபக்ஷ குடும்பத்தினர் வழங்கிய பொய் வாக்குறுதிகளை நம்பித் தான் அவர்களின் கட்சிக்குப் பெரும்பா லான மக்கள் வாக்களித்து அவர்களை ஆட்சிப்பீடம் ஏற்றினார்கள். ஆனால், இறுதியில் நடந்தது என்ன? எல்லாம் தலைகீழாக மாறியுள்ளது. ஆணை வழங்கிய மக்களே ராஜபக்ஷ குடும்ப ஆட்சி வேண்டாம் என்று போராட் டத்தை ஆரம்பித்தார்கள்.

நானும் ராஜபக்ஷ குடும்பத்தினர் மாதிரி பொய் வாக்குறுதிகளை மக் களுக்கு வழங்கத் தயாரில்லை. தற்போ தைய பாரிய பொருளாதார நெருக்கடிக்கு இவ்வருடத்துக்குள் தீர்வு கிடைக்கும் என்று கனவிலும் நினைக்கவே கூடாது.

இம்மாதத்தின் ஆரம்பத்தில் நான் சொன்ன மாதிரி பொருளாதார நெருக் கடி நிலைமையிலிருந்து நாட்டை மீட் டெடுக்க ஒன்றரை வருடங்களாவது தேவை. அதேவேளை, சர்வதேசமும் தொடர்ந்து உதவிகளை வழங்கினால் தான் குறித்த காலப்பகுதிக்குள் நாட்டை மீட்டெடுக்க முடியும்.

நான் மீண்டும் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்ற நாளிலிருந்து நாட்டு மக்களுக்கு உண்மை நிலவரத்தைத்தான் கூறி வருகின்றேன். எனது கருத்துக்களை எடுத்துக்காட்டி எதிரணியினர் அரசியல் நடத்துகின்றனர். பிரச்னைகளையும், இய லாமைமையும் கூறும் பிரதமர் எதற்கு என்று அவர்கள் பிரசாரம் செய்கின்றனர். இது அவர்களின் சிறுபிள்ளைத்தன அரசி யலைக் காட்டுகின்றது-என்றார். (அ)

## இலங்கையி...

இந்த நிலையில் திருகோணமலைப் பகுதியில் இருந்து படகு மூலம் வயோதி பத் தம்பதியர் 2 பேர் நேற்று அதிகாலை இராமேஸ்வரம் அருகே உள்ள தனுஷ் கோடி கடற்கரையில் இறங்கினர்.

இவர்கள் இருவரும் மயக்க நிலையில் கடற்கரையில் சுருண்டு விழுந்து கிடந்த னர். இது குறித்து தகவல் அறிந்த கடலோ ரப் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து மயக்க நிலையில் இருந்த அவர்களை மீட்டு அம்புலன்ஸ் மூலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத் தனர்.

இவர்களுக்கு மருத்துவமனையில் மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகின் றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக பொலி ஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (அ)

## காங்கேசன்...

சேவை ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித் தார்.

இந்தச் சேவையானது இலங்கையர் களுக்கு எரிபொருள், உரம், பால் மற்றும் மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை குறைந்த விலையில் பெற் றுக் கொள்ள உதவும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார். (அ)

# நிதி முகாமை நுட்ப உதவியை வழங்க அமெரிக்கா இணக்கம்!

கொழும்பு, ஜுன் 28

இலங்கையில் நிதி முகாமைத்துவத் துக்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்க அமெரிக்கா இணக்கம் தெரிவித் துள்ளது. நேற்றுமுன்தினம் நாட் டுக்கு வந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக் களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியா வுக்கான பிரதி இராஜாங்க செயலாளர் கெல்லி கெய்டர் லிங் நேற்றுப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரை யாடினார்.

இலங்கை அரசாங்கத்துக்கும் சர்வ தேச நாணய நிதியத்துக்கும் இடையில் இடம் பெற்று வரும் பேச்சுகளுக்கு ஆதர வளிப்பதாக அமெரிக்க இராஜதந்திர குழுவும் தெரிவித்துள்ளது.

பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் இலங்கைக் கான அமெரிக்க தூதுவர் ஜூலி ஷுங்கும், ஆசிய கருவூலத்தின் துணைச் செயலர் ரொபர்ட் கப்ரோத், பிரதமரின் செயலா ளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் பிரதம ரின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர். எச்.சமரதுங்க ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)

## அமெரிக்க...

தேசிய அமைப்பாளரான பஸில் ராஜ பக்ஷ இரட்டை குடியுரிமை கொண்ட வர். இரட்டைக் குடியுரிமை கொண்ட வர்கள் பாராளுமன்ற உறுப்புரிமையை வகிக்கக்கூடாது என்ற விதியை 21ஆம் திருத்தம் மூலம் ஏற்படுத்த முன்னெடுக் கப்பட்ட நடவடிக்கைகளை தொடர்ந் தும், அவருக்கான எதிர்ப்புகளை தொடர்ந் தும் அண்மையில் அவர் தமது பாராளு மன்ற உறுப்புரிமையை துறந்தார்.

இந்நிலையில், தமது கட்சியின் மூத்த உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்களுடன் தொடர் கலந்துரை யாடல்களை அவர் நடத்தினார்.

இந்தக் கலந்துரையாடலின் இடையே அமெரிக்க குடியுரிமையை துறந்து, தீவிர அரசியலில் ஈடுபட தாம் முடிவெடுத்துள் ளார் என்று கூறியுள்ளார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித் தன. (ஐ -சி)

## மின்சார...

குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்தார்.

பெரும்பாலான வீட்டு மின் நுகர் வோருக்கு சலுகையாக 57 வீதத்துக்கு மிகாமல் மின்கட்டண உயர்வு இருக்க வேண்டும் என்று ஆணைக்குழு கருது கிறது. கட்டண திருத்தம் தொடர்பாக பொதுமக்கள் உட்பட அனைத்துத் தரப் பினரும் தங்கள் கருத்துக்களையும் முன் மொழிவுகளையும் சமர்ப்பிக்க முடியும். எழுத்துமூர்வ கருத்துக்களை மின்னஞ் சல், தொலைநகல் மூலமாக எதிர்வரும் ஜூலை 18ஆம் திகதி வரை சமர்ப்பிக்க முடியும். வாய் மொழி மூல சமர்ப்பணங் களுக்கான இடம், திகதி பற்றி உரிய நேரத்தில் அறிவிக்கப்படும். இணைய வழியிலும் வாய்மொழி மூல கருத்துக் களை பதிவு செய்ய முடியும்.

எனினும், மின் கட்டண அதிகரிப்பு எந்தவொரு தனிநபரின் விருப்பின்படி யும் உயர்த்தப்படாது. மாறாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அறிவியல் முறைப் படியே இடம்பெறும்.

முழுநாட்டுக்குமாக 138 வீத கட்டண உயர்வு முன்மொழியப்பட்டாலும், கட் டண உயர்வு 67வீதத்தை விட அதிகமாக இருக்கக்கூடாது என்று பொதுச் சேவை கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டுகிறது.

பொதுப் பயன்பாட்டு நுகர்வோ ருக்கு 45 வீதம், தொழில்துறை நுகர்வோ ருக்கு 61 வீதம், ஹோட்டல்களுக்கு 43வீதம், அரச நிறுவனங்களுக்கு 43வீதம் மற்றும் வழிபாட்டு தலங்களுக்கு 189 வீதமும் மின்கட்டணத்தை அதிகரிக்கு மாறு மின்சார சபை கோரிக்கை முன் வைத்துள்ளது. டொலர்களில் வருமா னம் ஈடுபவர்களுக்கு டொலர்களில் மின்கட்டணத்தை ஏற்றுக்கொள்ளு மாறும் மின்சார சபை கோரியுள்ளதாக - ஆணைக்குழுவின் தலைவர் கூறினார்.

## ஓரின...

வந்த தமிழக பெண்ணை அக்கரைப்பற்று நீதிமன்றம் விடுதலை செய்தது.

இதேவேளை, ஒரு குழந்தையின் தாயா ரான அக்கரைப்பற்றை சேர்ந்த 19 வய தான பெண்ணை பிணையில் விடுவித்த நீதிமன்றம் அவரை பெண்கள் காப்பகத் தில் பராமரிக்க உத்தரவிட்டுள்ளது.

அக்கரைப்பற்று நீதிமன்ற நீதிவானின் சமாதான அறையில்

நேற்று திங்கட்கிழமை நடந்த வழக் கில், இரு பெண்களின் உளநல மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து நீதிவான், முதலா வது சந்தேக நபரான 19 வயது மதிக்கத் தக்க ஒன்றரை வயதான குழந்தையின் தாயாரை ஒரு இலட்சம் ரூபாய் ஆட் பிணையில் விடுவித்தார். அத்துடன், அவரை பெண்கள் காப்பகமொன்றில் அவரது குழந்தையின் எதிர்கால நலன் மற்றும் குறித்த பெண்ணின் நடத்தைகள் தொடர்பில் அறிக்கை கிடைக்கும் வரை ஒப்படைக்குமாறும் எதிர்வரும் ஜூலை மாதம் 29 ஆந்திகதி வரை குறித்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அத்துடன், இரண்டாவது சந்தேக நப ரான 24 வயது மதிக்கத்தக்க தமிழ்நாட்டை சேர்ந்த பட்டதாரியான பெண் தொடர் பில் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாமை யினால் அவர் தொடர்பில் முன்னிலை யான சட்டத்தரணி, இந்திய உயர்ஸ்தா னிகர் காரியாலயத்தில் ஒப்படைத்து சொந்த இடத்துக்கு மீள அனுப்புவதற்கு விடுத்த விண்ணப்பத்தை பரிசீலனை செய்த நீதிவான், அந்தப் பெண்ணை விடு தலை செய்தார்.

தமிழகத்தை சேர்ந்த பெண்ணும், இலங்கையை சேர்ந்த பெண்ணும் தொலைபேசி வாயிலாக அறிமுகமாகி நண்பர்களாகினர் என்றும். அவர்கள் இரு வரும் ஒரே பாலினத் திருமணம் செய்ய முடிவெடுத்தனர் எனவும், இதற்காக தமிழ்நாட்டை சேர்ந்த பெண் இந்தியா விலிருந்து கடந்த 20ஆம் திகதி அக் கரைப்பற்றுக்கு வந்தார் என்றும் அறிய வருகின்றது. (ஐ)

## இலங்கையின்...

ஷங் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்க திணைக்களம் மற்றும் திறைசேரி திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உயர்மட்ட அதிகாரிகள் குழு ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷவை நேற்று சந்தித்துள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூது வர் ஜூலி ஷங், ஆசியாவுக்கான பிரதி உத வித் திறைசேரிச் செயலாளர் ரொபேர்ட் கப்ரோத் மற்றும் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான பிரதி உதவி இராஜாங் கச் செயலாளரான கெல்லி கெய்டர்லிங் ஆகியோர் நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதியைச் சந்தித்து இலங்கையின் பொருளாதார நெருக்கடி தொடர்பில் கலந்துரையாடினர்.

இந்நிலையில், இந்த சந்திப்பு குறித்து ருவிட்டரில் பதிவிட்டுள்ள ஜூலி ஷங், ‘இலங்கையின் பொருளாதார நெருக்கடி குறித்து விவாதிக்கஇது ஒரு சவாலான நேரம், இலங்கைக்கு வளமான, பாது காப்பான மற்றும் ஜனநாயக எதிர்கா லத்தை அடைய உதவும் வகையில் நாங் கள் தொடர்ந்து உதவி மற்றும் நீண்ட கால பங்காளித்துவத்தை வழங்குகி றோம்’ என கூறியுள்ளார்.

மூன்று நாள் பயணமாக இக்குழுவி னர் நேற்று முன்தினம் காலை இலங் கையை வந்தடைந்தனர்.

அவர்கள் நேற்று காலை பிரதமர் ரணில் விக்ரமசிங்கவையும் சந்தித்திருந்த னர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu

# புலம்பெயர் தமிழ் முதலீட்டாளர்களுக்கு அரசு உரிய பாதுகாப்பு வழங்கவேண்டும்

## கருணாகரம் எம்.பி கிளிநொச்சியில் கோரிக்கை



**கிளிநொச்சி, ஜூன் 28**

**எமது புலம்பெயர் உறவுகள் இங்கு முதலீடுகளை மேற்கொள்வதற்கு முன்வருவார்களாயின் அவர்களுக்கு இங்கு பாதுகாப்பு வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் இடம்பெற்ற உதவும் உறவுகள் அமைப்பின் 13ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2009க்குப் பின்னர் அழிக்கப்பட்ட நமது பிரதேசங்கள் தற்போது படிப்படியாக வளர்ச்சியுற்று வருகின்றது. ஆனால் நமது மக்களின் வாழ்வாதாரம் உயரவில்லை.

புலம்பெயர் தேசத்திலே எமது மக்கள் பலர் பெரிய செல்வந்தர்களாக இருக்கின்றார்கள்.

புலம்பெயர் தமிழர்கள் நினைத்தால் வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் இருக்கும் எமது மக்களின் வறுமையை ஒழிக்கலாம்.

நலிவுற்ற எமது மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தலாம். ஆனால், அவர்களுக்கு மனம் இருந்தாலும் அதற்கான களம் இல்லாமல் இருக்கின்றது.

தற்போது இந்த நாடு, பொருளாதார ரீதியில் அதள பாதாளத்தில் தள்ளப்பட்டிருக்கும் இந்த நேரத்தில் புலம்பெயர் தேசத்திலே வாழும் எமது தமிழ் மக்களை இங்கு முதலீடுகள் மேற்காள்ளுமாறு இலங்கையின் ஆட்சியாளர்கள் அழைக்கின்றார்கள்.

இந்த நாட்டின் பொருளாதாரம் இந்த நிலைக்கு செல்வதற்கு அடிப்படை காரணமே இந்த நாட்டில் தமிழ் மக்கள் இரண்டாந் தர பிரஜைகளாக கணிக்கப்பட்டமைதான்.

எமது புலம்பெயர் உறவுகள் இங்கு முதலீடுகளை மேற்கொள்வதற்கு தயாராக இருக்கின்றார்கள். அவ்வாறு முதலீடுகளை மேற்கொள்பவர்களுக்கு இங்கு பாதுகாப்பு வேண்டும்.

அதற்கும் மேலாக அவர்கள் முதலிடும் பணத்திற்கு இங்கு பாதுகாப்பு வேண்டும். அந்த நிலைமை இங்கு உருவாக்கப்பட வேண்டும்.

21ஆவது திருத்த சட்டத்தில் 13ஆவது திருத்தச் சட்டத்தில் உள்வாங்கப்பட்ட சரத்துக்கள் பூரணப்படுத்தப்படுவதோடு, மாகாணங்களுக்கு நிதி அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும் என்பதை இன்று நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கேட்கவேண்டும். தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகளின் பிரதிநிதிகளும் கேட்க வேண்டும்.

மாகாணங்களுக்கு நிதி அதிகாரங்கள் இருக்குமாக இருந்தால் புலம்பெயர் உறவுகள் அந்தந்த மாகாண அரசுகளுடன் ஒப்பந்தங்களை செய்துகொண்டு இங்கு முதலீடுகளை மேற்கொள்ள முடியும். என்றார். (அ)

# அதிக பணவீக்கம் பதிவாகிய நாடுகள் பட்டியலில் இலங்கைக்கு 2 ஆம் இடம்!

கொழும்பு, ஜூன் 28

அமெரிக்காவின் ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான ஸ்டீவ் ஹான்கி, அதிக பணவீக்கம் பதிவாகிய நாடுகளின் பட்டியலை வெளியிட்டுள்ளார்.

பேராசிரியர் ஸ்டீவ் ஹான்கேயின் மதிப்பீட்டின்படி, உலகில் வருடமொன்றுக்கு அதிக பணவீக்கம் விகிதம் பதிவாகிய நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளது.

அறிக்கையின்படி, சிம்பாப்வே முதலிடத்தில் இருக்கும் அதே வேளை, துருக்கி இலங்கைக்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்திலும் லெபனான் 4 ஆவது இடத்திலும் உள்ளது. (அ)

# பீப்பாய்களில் டீசல் ஏற்றிச்சென்ற வாகனம் சம்மாந்துறையில் மக்களால் மடக்கி பிடிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 28

சம்மாந்துறையில் சந்தேகத்துக்கிடமான முறையில் வாகன மொன்றில் 18 பீப்பாய்களில் டீசலை கொண்டு செல்ல முற்பட்டவர்கள் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

எரிபொருள் நிலையம் ஒன்றினூடாக பல சந்தர்ப் பங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடை பெறுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் சிறியரக லொறியில் சம்மாந்துறை மணிக்கூட்டுகோபுர பக்கமாக பீப்பாய்களில் டீசல் கொண்டு செல்வதை எரிபொருளுக்காக காத்திருந்த பொதுமக்கள் அவதானித்துள்ளனர்.



குறித்த வாகனத்தை சந்தேகத்தின் அடிப்படையில் மீண் டும் வரும்போது சம்மாந்துறை மணிக்கூட்டு கோபுரத்தடியில் எரிபொருள் பெறுவதற்காக காத் திருந்த பொதுமக்கள் பரிசோதித்தபோது சுமார் 18 கொள்கலன்களில் டீசல் நிரப்பப்பட்டு இருப்பதை அறிந்த பொதுமக்களுக்கும் வாகனச் சாரதிக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

பின்னர் பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவலை வழங் கியதன் பின் அங்கு வருகை தந்த சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.எச். ஜெயலத் மற்றும் பொலிஸார் குறித்த சிறிய ரக லொறியை பொறுப்பேற்றுள்ளனர்.

குறித்த லொறியில் டீசல் இருப்பதை உறுதிப்படுத்திய பின்னர் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்துக்கு வாகனம் கொண்டு செல்லப்பட்டது.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (அ)




## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 12 - 12 - 1929 | 22 - 06 - 2022 |



**திருமதி பிலோமினா ராஜேந்திரம்**

**(ஊர்காவற்துறை புனித மரியாள், பம்பலப்பிட்டி புனித மரியாள் கல்லூரிகளின் இளைப்பாறிய ஆசிரியை)**

நாரந்தனையை பிறப்பிடமாகவும், கொழும்பு, பிரித்தானியா Catford ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட பிலோமினா ராஜேந்திரம் அவர்கள் 22.06.2022 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இன்னாசிமுத்து, றோசமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற மரியாம்பிள்ளை பொன்னையா, அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற மரியாம்பிள்ளை பிரான்சிஸ் ராஜேந்திரம் அவர்களின் அன்பு மனைவியும்,பவுலின் ஞானசூரியர்(இலங்கை), காலஞ்சென்றவர்களான திரேசம்மா அருளப்பு, அல்பிரட், சேவியர், சீவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயராசா பிலோமின், stella, இமெல்டா, திலகா, வசந்தி, காலஞ்சென்றவர்களான அருளப்பு, ரஞ்சி, ஞானசூரியர், ஜோசப் மரியநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், வில்லியம் கொன்சேகா (ராஜன்), நோயல் (எதி), டொறீன் (நந்தினி), Bernard (ஜோ), மொறீன் ஆகியோரின் அன்புத் தாயாரும்,மடோனா, ரேவதி, Edward அருள்நேசதாசன், Prexci, நிஷான் ஆகியோரின் அன்பு மாமியாரும், Sharanya, Thayan, Amy, Damien, Luxshan, Saathvika, Sutharshan, Christopher, Christina, Adrian, Jessica ஆகியோரின் அன்புப் பேத்தியும், Kairen அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார்.

பார்வைக்கு :
Friday, 01 Jul 2022 6:00 PM - 8:00 PM
N. S. Wibberley Funerals (London) 2 Parade Sandhurst Rd, London SE6 1DH, United Kingdom

திருப்பலி :
Saturday, 02 Jul 2022 9:00 AM
Holy Cross RC Church 208 Sangley Rd, London SE6, United Kingdom

நல்லடக்கம் :
Saturday, 02 Jul 2022 11:00 AM
Hither Green Cemetery Verdant Ln, London SE6 1TP, United Kingdom

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
Joe - மகன்

தொடர்புகளுக்கு
Rajan - மகன் Mobile : +61409027134
Noel - மகன் Mobile : +447958679795
Edward - மருமகன் Mobile : +61413585506
Joe - மகன் Mobile : +447956319576
Phone : +442086971400
Maureen - மகள் Mobile : +447950205566




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : மழலைகள் நேரம் (மறு ஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-விக்ரம் வேதா,இப்படை வெல்லுமா திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம்-நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை-இலக்கிய நிகழ்ச்சி



10.00 மணி : BLACK AND WHITE

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**ஓம் ரிவி**

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு